பக்கங்கள் 8

# ஈழநாடு
**EELANAADU**

50 சதம்

மலர் 22 | புரட்டாதி 11 | ஜூல்-கஃ 16 | இதழ் 228

யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 27 - 9 - 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED 1980-9-29
PERIODICALS DIVISION

## ஜனதிபதி பிரதம அதிதி

(கொழும்பு)

இராமகிருஷ்ண மிஷன் பொன்விழாவின் இன்றைய நிகழ்ச்சியின்போது ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்துகொள்கிறார்.

கல்கத்தா இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி புத்ரேஸ் ஆனந்தாஜி மகராஜ் தலைமையில் நடைபெறும் இன்றைய 7 ம் நாள் நிகழ்

(8ம் பக்கம் பார்க்க)

நரத்தினில் சிறந்த
மான் - முயல்
வரிக்குதிரை
யானை - விளக்கு
செவனு பூ
புலிமார்க் ஒடுகளேயே
பாவியுங்கள்
மு. நா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

## அயத்தொல்லா கொமெய்னி மரணம்?

### ஈராக் செய்திக்கு ஈரான் மறுப்பு

பக்தாத், செப். 26

ஈரானிய மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி காலமானார் என்று பக்தாத் வானொலி இன்று அறிவித்தது.

இச்செய்தியை ஈரான் மறுத்ததுடன் ஈராக்கின் பொய்ப் பிரசாரத்திற்கும் கண்டனம் தெரிவித்தது. அயத்தொல்லா கொமெய்னி உயிருடன் சுகதேகியாக இருக்கிறார் என்றும் தெரிவித்த ஈரான் கொமெய்னி இன்று தொலைக்காட்சியில்தோன்றி உரையாற்றுவார் என்றும் தெரிவித்துள்ளது. (இ)

## ஐ. நா. பாதுகாப்புச் சபை இரகசியமாகக் கூடியது

நியூயோர்க், செப். 26

ஈராக் - ஈரான் போர்நிலை குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை இன்று அவசரமாகக் கூடி ஆராய்ந்தது.

ஐ. நா. பாதுகாப்புச்சபையின் அவசர கூட்டம் ஒன்றைக் கூட்டி இவ்விவகாரம் குறித்து ஆராயுமாறு பொதுச் செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் பாதுகாப்புச் சபைத் தலைவருக்கு விடுத்த கோரிக்கையை அடுத்தே இக் கூட்டம் கூட்டப்பட்டது.

இதேவேளையில் பாதுகாப்பு சபை கடந்த இரவும் இரக

(8-ம் பக்கம் பார்க்க)

### ஈரான்-ஈராக் கோர யுத்தம் நீடிக்கிறது

# அணு ஆயுதப் போராக மாறுது

# தடுக்க அமெ. ரஷ்யா இணக்கம்

## ஈராக் வீரர்கள் சரண்

### ஈரான் இராணுவ முகாம் முற்றுகை

நியூயோர்க், செப். 26

**ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையே நீடித்துவரும் யுத்தம் உலகின் இரு பெரும் வல்லரசுகளுக்கிடையே அணு ஆயுதப் போராக விஸ்தரிக்கக்கூடாது என்பதையிட்டு அமெரிக்காவும் ரஷ்யாவும் இணக்கம் தெரிவித்துள்ளன.**

ஈரான்—ஈராக் சண்டை உகை அணுஆயுதப் போராக மாறலாம் என இதுவரை நிலவிவந்த அச்சத்தை இருநாடுகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள இந்த இணக்கம் தற்போது நீக்கியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### 50 ஈராக் டாங்கிகள் கைப்பற்றப்பட்டன

ஹொரம்சநகரிலும் அபடானிலும் கடும் சண்டை நடைபெற்று வருவதாகவும் வெறும்சர் நகரில் ஊர்வலம் நடத்திய 50 ஈராக் தாங்கிகள் கைப்பற்றப்பட்டன என்றும் அவற்றுடன் வந்த வீரர்கள் ஈரானிய படைகளிடம் சரணடைந்துவிட்டதாவும் தெஹ்ரான் வானொலி அறிவித்தது.

அபடான் எண்ணை சுத்திகரிப்பு ஆலை மீது ஈராக் பீரங்கிகள் இன்றும் தாக்குதக நடத்தின என்று ஈராக் தெரிவித்தது.

### ஈரான் ஜெட் சுட்டு வீழ்த்தப்பட்டன

20 ஈரானிய ஜெட் விமானங்களை சுட்டு வீழ்த்தியதாகவும் மூன்று ஈராக் விமானங்களும் இத்தாக்குதலின் போது சேமடைந்ததாகவும் ஈராக் தெரிவித்துள்ளது.

### இராணுவ முகாம் கைப்பற்றப்பட்டது

ஈரானிய இராணுவ முகாம் ஒன்றை இன்று கைப்பற்றிய ஈராக் படைகள் நாற்றுக் கணக்கான ஈரானிய வீரர்களைச் சிறைப்பிடித்துள்ளதாகவும் ஈராக் அறிவித்தது.

### ஈரான் படைகள் சரணடைய வேண்டும்

ஈராக்படைகள் ஈரானுக்குள் முன்னேறிக் கொண்டிருப்பதால் ஈரானிய துருப்புக்கள் ஆயுதங்களை ஒப்படைத்து தம்மிடம் சரணடைய வேண்டுமென்று ஈராக் வானொலி செய்தியொன்றை விடுத்துள்ளது.

### ஹொரொம்ஸா துறைமுகம் ஈராக் வசம்

ஈரானிலுள்ள "ஹொரம்ஸா" துறைமுகத்தை ஈராக் துருப்புக்கள் கைப்பற்றியுள்ளதாக பாக்தாத்திலுள்ள இராணுவத் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது. ஆனால் ஈரான் இதனை மறுத்துள்ளது.

8-ம் பக்கம் பார்க்க

## சுவீப் முடிவுகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட் 801-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

**முதலாவது பரிசு**
**13 L 0986**
ரூபா 1,00,000

**இரண்டாவது பரிசு**
**05 F 0586**
ரூபா 40,000

**மூன்றுவது பரிசு**
**32 N 0455**
ரூபா 10,000

தலா ரூபா 1733-10 சதம் பெறும் 100 ஆறுதல் பரிசு டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 11 A 0472 | 12 A 0646 |
| 30 A 0691 | 33 A 0654 |
| 02 B 0574 | 15 B 0851 |
| 31 B 0193 | 14 C 0127 |
| 24 C 0417 | 29 C 0493 |
| 36 C 0599 | 05 D 0958 |

8-ம் பக்கம் பார்க்க

### சிறிமா, பீலிக்ஸ்

## குடியுரிமைரத்து பிரேரணை: கூட்டணி எதிர்க்கும்

(கொழும்பு)

ஜனதிபதி ஆணைக் குழுவின் சிபார்சுக்கமைய முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, முன்னாள் நிதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரின் குடியியல் உரிமைகளை ரத்துச்செய்யும் பிரேரணையைப் பாராளுமன்றத்தில் எதிர்ப்பதென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றத்தில் எதிர்ப்பதென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழு ஏகமனதாகத் தீர்மானித்தது.

குடியியல் உரிமைகள் ரத்துப் பிரேரணையைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, அடுத்த மாதம் 16ந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார். (ம-இ)

### தொலைபேசி மூலம்

## சிறிமாவுக்கு இந்திரா ஆலோசனை கூறினரா?

### ஜனதிபதியின் கவனத்தில் உள்ளதாகச் சபையில் தகவல்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் கடந்த புதன் இரவு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜனதிபதி ஆணைக்குழுவின் சிபார்சு காரணமாக மனம் தளரக்கூடாதென்று ஆறுதல் கூறியதுடன் சில ஆலோசனைகளையும்வழங்கியதாக வெளிவந்த செய்தி குறித்து நேற்று பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

நேற்றைய உள்ளூர் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளியானசெய்தியையே இவ்வலப்பிட்டிய எம். பி. திரு. ஆரியரத்னஜயத்திலகா நேற்று சபையில் பிரஸ்தாபித்தார்.

இச்செய்தி உண்மையானல் இது எமது நாட்டு உள்விவகாரத்தில் திருமதி இந்திரா காந்தி தலையிடுவதாக உள்ளதாகத் தாம் கருதுவதாகவும் இது சர்வதேச ரீதியில் எமது நாட்டுக்குப் பிணக்கை ஏற்படுத்தாதா என்றும் திரு. ஜயத்திலக்கா குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட தகவலை திரு அனுர பண்டாரநாயக்கா கூறியதாகவே அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் இது குறித்து ஏற்கனவே எமது ஜனதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் பிரதி வெளிநாட்டமைச்சர் திரு. திரோன் பெர்னண்டோ கூறினர். (ம இ)

போட்டோஸ்ராட் பிரதிகள்

**துரை**

யப்பானில் இருந்து வரவழைக்கப்பட்ட கனன் தாள்களில் உங்கள் போட்டோஸ்ராட் பிரதிகளை எம்வசமுள்ள கனன் மெசினில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். ஜி. பில்டிங் 66 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7759 7786 தந்தி விலாசம்: 'SPARE' JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பீச் ரோட்டில் சகல நவீன வசதிகளும் உள்ள நான்கு அறைகள் கொண்ட வீட்டுடன் நான்கு பரப்புக்காணி விற்பனைக்குண்டு விலை இரண்டரை லட்சத்திற்கு மேற்பட, 3, கவுன்சில் லேன், தெஹிவளை. 6918

தட்டாதெருச் சந்திக்கு அருகாமையில் காணி விற்பனைக்கு உண்டு. நான்கு சோடி கதவு நிலைகளும் உண்டு. விபரங்கட்கு 66, இந்துக்கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை தொலைபேசி இல: 7728. (6922)

ஈச்சமோட்டையில் இரண்டு பரப்புக்காணி. விபரங்கள்: தியாகராசா, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, 6911

### பயிற்சி

3மாத மாலைநேர எலக்றிக்கல் டிப்ளோமா பயிற்சி 06-10-80ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 9/1, Stanley Road Jaffna. 6925

### வெற்றுச் சாக்கு விற்பனைக்குண்டு

வலிகிழக்கு வடபகுதி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம்பிரிக்கப்பட்ட சுமார் 4500 சாக்குகள் விற்பனைக்குண்டு. இவற்றை வாங்க விரும்புவோர் கேள்விவைப்புப் பணமாக 250/- ரூபாவும், விண்ணப்பப் படிவத்திற்கு 5 - ரூபாவும், மொத்தமாக ரூபா 255/-ஐ தலைமைக்காரியாலயத்தில் 2-10-1980-ந் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர்கட்டி, விண்ணப்பபத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தை7-10-1980ந் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவேண்டும்.

இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம் என்று எழுதப்பட வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
வலி. கி. வ. ப. ப. நோ. கூ. சங்கம்,
அச்சுவேலி.
6896

# மா. அ. சபையை ஆதரித்த கூட்டணிக்குப் பாராட்டு

## யாழ். மாநகரசபைக்கு தீர்மானம் வருகிறது

(யாழ்ப்பாணம்)

"மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டத்தை ஆதரிப்பதென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை மேற்கொண்ட முடிவை இச் சபை வாழ்த்திவரவேற்கிறது" என்ற பிரேரணையை இம்மாதம் 30ம் தேதி நடைபெறவிருக்கும். யாழ், மாநகர சபைக் கூட்டத்தில் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் உறுப்பினர் திரு. க. ஆறுமுகம் இப் பிரேரணையை கொண்டு வருவார்,

மேலும் பொதுச்சபையின் மேற்படி தீர்மானத்துக்கு அமைந்து மாவட்ட சபைகள் மீது பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்திலும், வாக்களிப்பிலும் ஒருமைப்பாட்டுடன் பங்குபற்றி வாக்களித்த கூட்டணியின் உறுப்பினர்களை பாராட்டுவதெனவும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-அ)

## 'மகாதேவா பாலத்தைப் பூர்த்திசெய்க'

### பிரதமரைக் கோரும் பிரேரணை

(யாழ்ப்பாணம்)

கேரதீவு — சங்குப்பிட்டிப் பாலத்தைப் பூர்த்தி செய்யுமாறு பிரதமரையும் நெடுஞ்சாலைத் திணைக்கள அமைச்சரையும் கேட்டுக் கொள்ளும் பிரேரணை ஒன்றை திரு. சி. தியாகராசா யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

நகரமுதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் இம்மாதம் 30 ம் திகதி நடைபெறவிருக்கும்கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கும் இப்பிரேரணையில் கூறப்பட்டிருப்பதாவது:

"கேரதீவு—சங்குப்பிட்டிக்கு இடையில் போடப்பட்டுள்ள பாலத்தில் குறையாக உள்ள பகுதியை நிரப்பித்தரும்படி பிரதமமந்திரியையும்; நெடுஞ்சாலைகள் திணைக்கள மந்திரியையும் கேட்டுக் கொள்வதென இச்சபைதீர்மானிக்கிறது."

யாழ். நகரில் நுளம்புத் தொல்லையை முற்றாக ஒழிக்குமாறு உரிய அதிகாரிகளைக் கோரும் பிரேரணையொன்றையும் திரு. தியாகராஜா முன்னறிவித்தல் செய்துள்ளார். (க-அ)

## இவர்கள் மீது சட்ட நடவடிக்கை

(மன்னார்)

இவ்வருடம் காப்புறுதி செய்து பதிவு செய்யப்படாத மன்னார் மாவட்டத்திலுள்ள மீன்பிடிக்கலங்களின் சொந்தக்காரர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென மாவட்ட கடல் தொழில் விரிவாக்க அதிகாரி திரு. வேலாயுதம் தெரிவித்தார்.

கடல் தொழில் அமைச்சின் புதிய திட்டப்படியே இச்சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (அ)

## சிறு கைப்பணிப் பொருட்காட்சி

(பச்சிலைப்பள்ளி)

உசன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், உசன்இராமநாதன் வித்தியாலயத்தில் சிறு கைப்பணிப் பொருட்காட்சி ஒன்றை நடத்தியது. இக்கைப் பணிப் பொருட்கள் யாவும் உசன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினாலேயே செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளிதோறும் பற் சிகிச்சை

(மன்னார்)

பேசாலை ஆஸ்பத்திரியில் இம்மாதம் 5ம் திகதி தொடக்கம் பல் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப் பற்சிகிச்சை பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும். (அ)

## ஞானப்பிரகாசருக்கு பேசாலையில் சிலை

(மன்னார்)

பேசாலை பிரதான வீதியில் சுவாமி ஞானப்பிரகாசர் உருவச்சிலையொன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான நிர்மாணவேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. பேசாலை வளர் கலை மன்றம் இச்சிலையை நிறுவ முன்வந்துள்ளது. (அ)

## இ. சே. மன்றம் அமைக்க முயற்சி

(மன்னார்)

பேசாலையில் தேசிய இளைஞர் சேவை மன்றம் ஒன்றை அமைக்கவும் இதுவரை காலமும் இயங்காதிருந்த பேசாலைக் கிராம முன்னேற்றச் சங்கத்தைப் புனரமைக்கவும் பேசாலை கிராம சேவை அலுவலர் திரு, ஜே. ஜே. மிராண்டா நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

## புதிய பஸ் சேவை

(நெல்லியடி)

காரைநகர் இ. போ. ச. டிப்போ தொண்டமானாற்றுக்கு காரைநகரிலிருந்து மல்லாகம்,அளவெட்டி ஊடாகபுதிய பஸ் சேவையொன்றை நடாத்தி வருகின்றது.

தினமும் நான்கு தடவைகள் இப் பஸ் சேவை நடைபெறுகிறது.

## நாளை உதயசூரியன் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழான உதயசூரியன் வெளியீட்டு விழா கூட்டணிச் செயலகத்தில் நாளை பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடக்கும் இவ் விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் முதல் பிரதியை வழங்க யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் முதற் பிரதியை பெற்றுக்கொள்வார்.

கூட்டணி எம். பிக்களான திருவாளர்கள் சி. [illegible] பிள்ளை, தா. திருநாவுக்கரசு, த. இராசலிங்கம், க. துரைரத்தினம், மற்றும் திருவாளர்கள் மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், தா. மகாசிவம், மு. ஆலாலசுந்தரம், ஆசீர்வாதம் ஹென்றி ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள். (க)

## மருதமடு நீர்ப்பாசன திட்டம்

(மன்னார்)

மருதமடு நீர்ப்பாசனத் திட்டவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மூதூர் எம். பி. யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஃறூப் தெரிவித்தார். இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை ஆரம்பிக்குமாறு விடத்தல் தீவு மக்கள் 30 வருடங்களாகக் கோரிவந்தனர்.

## மன்னார் – பேசாலை பஸ்சேவை

(மன்னார்)

மன்னார்-பேசாலை நேரடிபஸ் சேவை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக மாவட்ட அமைச்சின் பிரத்தியேக செயலாளர் ஜனாப். ஜே. எம். ஏ. அக்பர் தெரிவித்தார். (அ)

## ஆட்சிக்குழு மட்டக்களப்பில் கூடும்

(மட்டக்களப்பு)

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிக்குழுஅடுத்த மாதம் 4ம்,5ம் திகதிகளில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா தலைமையில் கூடவுள்ளது.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவந்த ஆட்சிக்குழுவின் கூட்டங்கள் வெளி இடங்களிலும் நடைபெற வேண்டுமென ஆசிரியர்கள் வற்புறுத்தி வந்ததன் காரணமாக இம் முறை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா மட்டக்களப்பு மாவட்ட இடமாற்றம்; பொதுவேலைநிறுத்தத்தில் வேலை இழந்தோர்நிலை மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்; அடுத்த வருட ஆசிரியர் இடமாற்றம் பல்கலைக்கழக அனுமதி; ஆசிரியர் பயிற்சி அனுமதி; அடுத்த மகாநாடு உட்பட பலமுக்கிய விஷயங்கள் ஆராயப்படவுள்ளது. கூட்டத்தில் 15 மாவட்ட பிரதிநிதிகளுடன் 52 கிளைச் செயலாளர்களும் கலந்து கொள்வர்.

## கோட் [illegible] விற்பனவு விளம்பரம்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

1. செல்லையா மாணிக்கவாசகரும்,
2. பெண் சரஸ்வதியும், [illegible]
சத்திரத்தை, காரைநகர், — வழக்காளிகள்

இல: ஈ.நி/370 எதிராக

1. கிருஷ்ணபிள்ளை கந்தசாமி கைம்பெண் குணவதி, கந்தரோடை வீதி, உடுவில். — எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் MB / 370-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1980-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9-ந் திகதி (9-10-1980) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 7180/-ம் 11-10-1974 தொடக்கம் 21-5-1976 வரைக்கும் ரூபா 5000/-க்கு 12 வீதவட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 646-92. இதில் தீர்வைத்தொகையில் ரூபா 2000/-மும் செலவுத்தொகையில் ரூபா 300/-ம் எதிராளி செலுத்தியுள்ளார்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்குப்பகுதி, உடுவிற்கோவிற்பற்று, சங்குவேலி இறை, "கப்பிலாப்புரம்" அளவுக்காரன் ஆர். சி. லோறன்ஸ்பிள்ளையால் தயாரித்த 58-ம் இலக்க பிளானில் கண்ட 3-ம் துண்டு நிலப்பரப்பு மூன்றும் குளி பதினைந்தொடு பத்தில் மூன்றும் (நில. பர. 3 குளி 15 3/10) வான்பயிர்களும், செய்பயிர்களும், வீடுகளும், கிணறும். எல்லை கிழக்கு: ரோட்டு, வடக்கு: குணவதிக்குரிய 58-ம் பிளானில் கண்ட R-ம் துண்டு, தெற்கு: சாமுவேல் முருகேசுவின் உரிமைக்காரனின் ஆதனம். இடங்களும்.

க. சிவஸ்கந்தா,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், மதிப்பாளரும்,

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை,
02-09-1980.

6926





காயங்களை ஆற்றும் துண்டுகள் பான்ட்-எயிட்
பிளாஸ்ரிக் துண்டுகள்

அடுத்த முறை உங்களுக்குக் காயம் ஏற்பட்டால் நிவாரணமளிக்கும் துண்டினை ஒட்டி விடுங்கள் – பான்ட் எயிட்.
சுத்தத்திற்காக ஒவ்வொரு துண்டும் தனித்தனி உறையில் சுற்றப்பட்டிருக்கிறது.
காற்றோட்டத்திற்காக துவாரங்கள் இடப்பட்டுள்ளன.
நீர் பட்டாலும் விடுபடாமல் நெடுநேரம் நிலைத்து நிற்கிறது பான்ட்-எயிட்.
ஜோன்சன் அன்ட் ஜோன்சனிடம் இருந்து பெறும் பான்ட்-எயிட் காயங்களை விரைவில் ஆற்றுகின்றன.

Johnson & Johnson

ஏஜெண்டுகள்:
CIC கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிட்.,
த. பெ. இல. 352, ஹேமாஸ் கட்டிடம் பிறிஸ்ரல் வீதி, கொழும்பு 1.

விலை 35 சதம்

Grant K & E 3369


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

இறைவனுடைய திருநாமங்கள் பலவாகும். அவரை அணுகுவதற்கு வழி தரும் ரூபங்கள் அனந்தமானவை. அவரை நீ எந்த நாமம் கொண்ட, எந்த ரூபம் கொண்டு வழிபட்டாலும் அதன் மூலம் நீ அவரை அறிந்துணருவாய்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

# தமிழினத்தைச் சரியான முறையில் 'அமிர்' வழிநடத்துகின்ருர்"

## யாழ். மாவட்ட அமைச்சர் பாராட்டு

(புலோலி)

"தமிழ்த் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தமிழ் மக்களின் நலன்கருதியே மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றுக் கொண்டார். ஆனல் அவர் தனது சுயநலம் கருதி தானே தமிழினத்தின் ஏகதலைவனாக விளங்க வேண்டுமென எண்ணி இருந்தால் இதை அவர் ஏற்றிருக்க மாட்டார். தனது சுயநலத்தை கருதாமல் தமிழ்மக்களின் நன்மைகருதி மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றுக் கொண்டு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி உள்ளது தமிழ்மக்களின் விமோசனத்திற்கு வழிவகுக்கின்றது. தமிழ்த் தலைவரான திரு. அமிர்தலிங்கம் மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்காது விட்டிருந்தால் அவர் தனது வாழ்நாள் முழுவதும் தமிழினத்திற்குத் துரோகம் இழைத்தவராகவே இருந்திருப்பார். ஆனல் அவர் தமிழ் இனத்தைச் சரியானமுறையில் வழிநடத்திச் செல்லுகின்ருர் என்பதையே அவர் மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றுக்கொண்டது வெளிப்படுத்துகின்றது."

இவ்வாறு வல்லுவெட்டித் துறையில் மரக்கூட்டுத்தாபன விற்பனை நிலையமொன்றைத் திறந்துவைத்து உரையாற்றிய யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் சொன்னர்.

மாவட்ட அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்; வல்வெட்டித்துறை மக்களுக்குத் தேவையான அரிந்த மரங்கள் இதுவரை காலமாக உடுப்பிட்டிக்குக் கொண்டு சென்றுதான் அரியப்பட்டு வருகின்றன. இக்கஷ்டத்தைப் போக்குமுகமாக வல்வை மரக்கூட்டுத்தாபன விற்பனை நிலையத்தில் மரம் அரியும் இயந்திரங்கள் பொருத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இம்மரக்கூட்டுத்தாபன விற்பனை நிலையம் அபிவிருத்தி செய்யப்பட்டு மக்களின் தேவைகளை மேலும் பூர்த்தி செய்வதற்குப் பொது மக்களின் இயன்றளவு ஒத்துழைப்பை வழங்கவேண்டும்" எனஞர்.

இலங்கைப் புகையிலைக் கைத்தொழில் கூட்டுத்தாபன நிர்வாக இயக்குநரும், ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகருமான திரு. கே. கணேசலிங்கம், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் ஆகியோரும் பேசினர.

இத்திறப்புவிழா வைபவத்திற்கு அரச மரக்கூட்டுத்தாபனத் தலைவர் கேர்ணல் கே. எவ். அபயவிக்கிரம தலைமை வகித்தார். (ஓ)

## நமது நோக்கு

### சீதனம்

"சீதனம் வாங்குவதை நிறுத்துங்கள்!"

இப்படியொரு தலைப்பைத் தாங்கிய துண்டுப்பிரசுரத்தை அறவழிப் போராட்டக்குழு வெளியிட்டிருக்கிறது.

● "சீதனம் கொடுப்பதும்-வாங்குவதும் அடிமைத்தனம். ● பதவிக்கு மதிப்புக் கொடாது - மனிதனை மதிப்போம்! ● பெண்களே! சீதனம் கொடுப்போரை (கேட்போரை) பகிஷ்கரியுங்கள், ● சீதனம் என்ற கொடிய வியாதி ஒழியட்டும். ● ஆண்கள் சீதனம் வாங்குவது அடிமைத்தனம். ● சிந்தனைத் தெளிவுபெற, திசை தெரியாது தவிக்கும் ஏழைப் பெண்கள் வாழ்வு மலர மனிதனின் அடிமைத்தளை அகற்ற ஒழிப்போம் சீதனம்- மறப்போம் சீதனம், தமிழர் ஒற்றுமை காப்போம், புதியதோர் உலகம் செய்வோம்" என்று அறவழிப் போராட்டக் குழுவின் துண்டுப் பிரசுரம் கூறுகிறது.

நன்மை விரும்பிகள் அனைவரும் அறவழிப் போராட்டக் குழுவின் இந்த நல்ல முயற்சியை நிச்சயம் வரவேற்பார்கள். இது வெற்றி பெறுவதற்கு சகலரும் ஒத்துழைப்பு அளிக்கவேண்டியது அவசியம்.

சீதன முறை ஏழைக் கன்னிப் பெண்கள் பலருக்கு வாழ்வளிக்க வழியில்லாமல் செய்திருப்பதுமட்டும்தான் முக்கிய காரணமல்ல. சமுதாயத்தில் கரண்டலும் ஊழலும் நிலைபெறுவதற்கு இந்தச் சீதனம்தான் முக்கிய காரணம். ஒரு சமுதாயம் அடிமை நிலையிலிருப்பதற்கும் சீதனம் ஒரு காரணமாகும்.

இந்திய விடுதலைக்குப் போராடிய காந்திமகாத்மா இந்திய மக்களை ஒற்றுமைப் படுத்தாமல் சுதந்திரம் பெற முடியாதென்பதை உணர்ந்து அதற்கான திட்டத்தை வகுத்துச் செயல்படுத்தினர். தீண்டாமை ஒழிப்பு, சீதன ஒழிப்பு, கதர் இயக்கம் என்று நிர்மாணத்திட்டம் வகுத்து அதன் மூலம் மக்களிடம் தேசபக்தியை ஊட்டினர்; இந்தியாவுக்கு விடுதலையும் பெற்றுக் கொடுத்தார்.

நமது நாட்டில் தீண்டாமையை ஒழிப்பதற்கு சட்டமும் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சட்டத்தினுல்மட்டும் தீண்டாமையை ஒழித்துவிட முடியாதென்பது உண்மையே. ஆனலும் மக்களின் மனமாற்றத்துக்குச் சட்டமும் துணைபுரியுமென்பதை எவரும் ஒப்புக்கொள்வர். தீண்டாமை ஒழிப்புக்குச் சட்டம் துணைபுரிவதுபோல சீதன ஒழிப்புக்கும் சட்டம் துணைபுரியுமென எதிர்பார்க்கலாம்.

தீண்டாமை ஒழிப்புக்குச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று பாராளுமன்றத்தில் தனியார் பிரேரணையொன்றைத் தமிழ் அரசுக்கட்சி உறுப்பினராகவிருந்த திரு. என். ஆர். இராஜவரோதயம் கொண்டுவந்து வழி காட்டினர். சீதன ஒழிப்பு இன்று தமிழ்ச் சமுதாயத்துக்கே அவசியமாகவிருப்பதால் தமிழர் கூட்டணியினர் சீதனஒழிப்புக்கான சட்டம் கொண்டுவருவதற்கு அரசைத் தூண்டுவது அவசியமாகும்.

சீதனத்துக்காக ஒருசிலரின் பணம் முடக்கிவைக்கப்படுகிறது. சீதனத்துக்காக உழைப்பு சுரண்டப்படுகிறது. லஞ்சமும் ஊழலும் சமுதாயத்தில் மலிந்துகிடப்பதற்கும் சீதனமே காரணம்.

தமிழ்ச் சமுதாயம் அடிமை நிலையிலிருந்து விடுதலை பெற்று சுதந்திரமாக வாழவேண்டுமானல் சீதன முறையை ஒழித்துக் கட்டியே தீரவேண்டும். இதன் பின்னர்தான் சுதந்திர சமதர்ம சமுதாயத்தை அமைக்க முடியும்.

சீதன ஒழிப்புக்கு அறவழிப் போராட்டக்குழு அடியெடுத்துக் கொடுத்திருக்கிறது. மற்றும் சமய, சமூக அரசியல் இயக்கங்களும் இதில் முழு மூச்சுடன் ஈடுபட்டு வெற்றி காணவேண்டுமென்பதே நமது பிரார்த்தனையாகும்.

## சாட்டிப் பெருவிழா நாளை

### சிந்தை மகிழ்விக்கும் சிந்தாத்திரை மாதா



பரந்து கிடக்கும் வெண்மணற் பரப்பு. நிறைந்து கிடக்கும் பச்சை சப்புதர்கள். இரைந்து அழைக்கும் அலைகடல். நிறைவாய் அளிக்கும் சிந்தாத்திரை அன்னை. இவ்வளவும் சேர்ந்து இவ்வுலகின் சொர்க்க பூமியாகச் சாட்டித் திருப்பதி திகழ்கிறது. அங்கு அருட் கோவில் கொண்டிருக்கும் சிந்தாத்திரை மாதாவின் அன்புக்கோலம் காண்பவரைக் காதலாகி கசிந்து கண்களில் கண்ணீர் மல்க வைத்து பேரின்ப உணர்வு ஊட்டும் அற்புதக் கோலமாக மிளிர்கிறது. அலை ஒலியுடன் கலந்தொலிக்கும் அன்னையின் அன்பழைப்பாம் ஆலய ஒலி கேட்டதும் ஆவின் குரல் கேட்ட கன்றுக மானிட ஆன்மாக்கள் ஆலயத்தில் குவிவது சாட்டியின் சாதரண காட்சி. தாயன்பின் சின்னமான மரியாள் அருள் பாலிப்பதால் சாட்டி ஆன்மீக உலகின் தாய்வீடாக நின்று மத இன வேறுபாடின்றி மக்கள் ஒருங்கு கூடும் யாத்திரைத்திருத்தலமாகத் திகழ்கிறது. மரியாள் மானிடத்தின் தாய். இந்தத் தாய் பிணி போக்கும் ஆரோக்கிய அன்னை

— அ. குகதாஸ்—

(7-ம் பக்கம் பார்க்க)

## இளங்கலைஞர் மன்றத்தின் தோற்றமும் வளர்ச்சியும்



**மு. இராமலிங்கம்**
(செயலாளர்)

இலங்கை இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசைவிழா நேற்று ஆரம்பமாகி அடுத்த மாதம் 5-ம் திகதிவரை பத்து நாட்கள் நடைபெறுகிறது. 4-10-30 சனிக்கிழமை நடைபெறும் பரிசளிப்பு விழாவில் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினிதிசநாயக்க பிரதம அதிதியாகவும் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் சிறப்பு அதிதியாகவும், அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைவராகவும் கலந்துகொள்வார்கள். திருமதி யோகேந்

(7-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### வட்டுக்கோட்டை பொது நூல் நிலையம்

வட்டுக்கோட்டை கிராம சபையினுல் நடத்தப்படும் வட்டுக்கோட்டை பொது நூல் நிலையம் சனி, ஞாயிறு தினங்களிலும், போயா, அரசாங்க விடுமுறை நாட்களிலும் காலை நேரங்களில் திறக்கப்படாதுள்ளது.

இதனுல் விடுமுறை நாட்களில் பாடசாலை மாணவர்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும் புதினப் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் படிக்கமுடியாதுள்ளது. விடு... [illegible]

## நாடும் நடப்பும்

"பேரன்பு மிக்கவரே,

வணக்கம். தங்கள் நிறுவனம் மூலம் தங்கள் பகுதிவாழ் மக்களுக்கு கல்வி, விளையாட்டு, கிராம அபிவிருத்தி, சமய, தொழில் துறைகளில் தாங்கள் ஆற்றுகின்ற அளப்பற்ற பணியினை அறிந்து நாம் மட்டற்றமகிழ்வு அடைகின்ருேம். சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட இவை தொய்வின்றி பட்டி தொட்டி எங்கும் இடம்பெறல் வேண்டுமென்பது எமது பெருவிருப்பமாகும்.

இவற்றுடன், தங்கள் நிறுவன எல்லைப்பிரதேசத்திற்குள் வாழ்கின்ற மக்களின் சமூகப் பிரச்சினைகளும் இன்றே தீர்க்கப்படல் வேண்டும். இவை மிக முக்கியமானவை அல்லவா? உங்கள் பகுதிவாழ் மக்களின் "கண்" போன்று விளங்கிகுகின்ற தங்கள் நிறுவனம் இதுதொடர்பாக உடன் நடவடிக்கைகள் எடுத்துச் செயல்பட வேண்டியுள்ளதே.

தங்கள் பகுதி மக்களின் அடிப்படை உரிமைகளைப் பேணவும், பாதுகாக்கவும், இந்துஆலயங்களில் சமத்துவ வழிபாட்டை ஏற்படுத்தவும், மயானங்களில் வேற்றுமையைத் தவிர்க்கவும், சகல சமூக மக்களிடையே ஒற்றுமை, ஐக்கியம், பரஸ்பர நல்லுறவினை ஏற்படுத்தவும் நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாக, கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்து பணிபுரிய வேண்டும் என நாம் தங்களை அன்பாக வேண்டுகின்ருேம்.

காலம் காலமாக தமிழ் மக்கள் மத்தியிலே நிலவிவருகின்ற சமூகப்பிரச்சினைகளுக்கு அன்பு வழியில் தீர்வுகாண வேண்டியது மிக மிக முக்கியமும், அவசியமுமாகும். இப்பிரச்சினைகள் எமது தலைமுறையுடன் தீர்க்கப்பட வேண்டியதாகும். எதிர்கால சந்ததியும் கூட இப்பிரச்சினைகளில் தம்மை ஈடுபடுத்தி அவர்களது சக்தி, நேரம், பொருள் என்பவற்றைச் செலவழிக்க நாம் அனுமதிக்கக்கூடாது. இதனை இன்றைய காலகட்டத்தில் நாம் செய்யவில்லை எனின், நாம் தமிழ் சமுதாயத்திற்குப் பெரும் பழி செய்தவர்களாவோம் என்பதைத் தாங்கள் அமைதியாகச் சிந்தித்துப் பாருங்கள்.

கிராமியத் தலைவர்களாக மிளிர்கின்ற நீங்கள் சமுதாய உணர்வுகொண்டு, விசுவாசத்துடன் நம்பிக்கையை வளர்த்துச் செயல்பட்டால் இப்பிரச்சினைகள் தீர்ப்பது மிகச் சுலபமான காரியமே. கிராமிய மக்களின் மொத்தப் பங்களிப்பின்றி எம்முன்னேற்றம் சமுதாயத்தில் ஏற்பட முடியாது. எனவே மக்களுக்குப் பிரச்னைகளைத் தெளிவுபடுத்தி அவர்கள் மத்தியில் விழிப்புணர்வையும் எழுச்சியினையும் ஏற்படுத்தி சமூகமட்டத்தில் நல்லபலமாற்றங்களைச் செய்ய உதவுங்கள்.

சில நூறுபேர்கள் மட்டும் சேர்ந்து சமுதாயத்தில் நல்ல பல மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்பதிலும் பார்க்க ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே அர்ப்பணித்து சமுதாய வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் பாடுபடவேண்டியது மிகவும் முக்கியமானதாகும். எனவேதான் நாம் தங்கள் சகலரினதும் மொத்தப் பங்களிப்பினையும் ஆதரவையும் அன்புடன் நாடி வருகின்ருேம். நாம் எல்லோரும் சேர்ந்து தமிழ் சமுதாயத்தின் உயர்ச்சிக்காகப் பாடுபட்டு உழைப்போம்.

நாம் மேலே கூறியவிடயங்கள் நிச்சயமாகத் தங்கள்மனத்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட அபிவிருத்திச் சபை:

# தேர்தலில் போட்டியிட முடிவு

(வவுனியா)

"மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அமுலுக்கு வரவிருக்கும் இக்கால கட்டத்தில் பல துறைகளிலும் மிகவும் பின் தங்கியுள்ள வவுனியா மாவட்டத்தை எவ்விதம் எந்த அமைப்பின் ஊடாக அபிவிருத்தி செய்யலாம் எனச் சிந்திக்க வேண்டிய நிலைமையில் உள்ளோம். தமிழர் விடுதலை கூட்டணியினர் தமிழ் ஈழம் தான் தமிழருக்கான விடிவு தரும் சரியான வழி எனக்கூறி வருகிறார்கள். அதே நேரத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபையை ஆதரிக்கின்ற அவர்கள் மாவட்ட மந்திரி பதவியை ஏற்க மறுத்துவிட்டார்கள். மாவட்டங்களின் அபிவிருத்தி வேலைகள் முழுவதற்கும் மாவட்ட மந்திரியே பொறுப்பாக இருப்பார். இந்த நிலையில் மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளில் அவர்கள் ஈடுபட முடியாது என்பது வெளிப்படையான உண்மை.

இவ்வாறு வவுனியா மாவட்ட அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் திரு. மு. நடராசா வவுனியா மாவட்டமும் அபிவிருத்திச் சபையும் என்னும் விடயம் தொடர்பாக நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே தெரிவித்தார்.

இக் கருத்தரங்கை வவுனியா மாவட்ட அபிவிருத்திக் கழகம் ஒழுங்கு செய்திருந்தது.

முல்லைத்தீவுத் தொகுதியில் கடந்த பொதுத் தேர்தலில் த. வி. கூட்டணிக்கு எதிராகப் போட்டியிட்ட திரு. சந்திரசேகரி பேசுகையில் கூறியதாவது: "தமிழர் விடுதலைக் கூட்டணி ஐக்கிய தேசியக்கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்ற அரசியல் சக்திகளுக்கு ஊடாக மட்டுமே எமது வவுனியா மாவட்டத்தைச் செய்யலாம் என்ற வெளிப்படையான கருத்து ஒன்று இது காலவரையும் நிலவி வந்துள்ளது. இந்த நிலையில் அரசியல் கலப்பின்றி வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திக்காக உழைப்பது சாத்தியமா என்ற புதிய சிந்தனை வித்து முளையெடுத்திப்பது வரவேற்கக் கூடியதே.

"இம்மாவட்டம் பின்தங்கிய நிலையில் இருப்பதற்கான காரணம்: கட்சித் தலைமைகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையே உள்ள இடைவெளி காலத்திற்குக் காலம் பெருகி வந்துள்ளதேயாகும். இந்த இடைவெளி அவசியமாகவும் அவசரமாகவும் நீக்கப்படவேண்டும். இப்போதைய தலைமைகள் தூக்கி எறியப்பட்டு புதிய சொல் திறன் மிக்க தகுதி வாய்ந்த தலைமைகள் உருவாக்கப்பட வேண்டும். உரிய தலைவர்களை இனம் காணும் சக்தியும் புதிய தலைமைகளை உருவாக்கும் திறனும் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது."

நடுச் செட்டிக்குளம் கிராமச் சங்கத் தலைவர் திரு. பொ. திருஞான சம்பந்தர், சட்டத்தரணிகள் திரு. சொர்ணபாலா, திரு. வில்வராசா, திரு: சிவரத்தினம், திருவாளர்கள் முத்தையா அருணாசலம், பத்மநாதன் ஆகியோரும் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் அரசியல் கட்சிகளின் துணையின்றி போட்டியிடுவதென பலவகையான வாதப் பிரதிவாதங்களின் பின் தீர்மானிக்கப்பட் இத் தீர்மானத்திற்கு ஆதரவாக 32 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டு தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது.

தேர்தல் பிரச்சார வேலைகளில் உடனடியாக ஈடுபடுவதென்றும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் கழகத்தின் கிளைகளை கிராமங்கள் தோறும் உருவாக்கி பலமான அமைப்பாக மாற்றுவதென்றும் கழகத்தின் கொள்கைகளை வெளிப்படுத்த வெகு விரைவில் பத்திகை ஒன்றை வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தேர்தல் பிரச்சார வேலைகளைக் கவனிப்பதற்காக 21பேர் கொண்ட குழுஒன்றும் அமைக்கப்பட்டது. இதில் சட்டத்தரணிகள், பட்டதாரிகள், பொதுநலத் தொண்டர்கள், அறிஞர்கள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (கு)

# சிறிமாவின் எம்.பி. பதவியும் பறிபோகும்

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரின் குடியியல் உரிமையை இழக்கச் செய்வது தொடர்பான பிரேரணை அடுத்த மாதம் 16 ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது.

இப்பிரேரணை நிறைவேற்றப்படும்பட்சத்தில் திருமதி பண்டாரநாயக்காவின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் ரத்துச் செய்யப்படும். (இ)

சுந்தராம்பாள் மறைவு:

## மாவை முருகன் திருப்பணிச் சபை அனுதாபம்

(மாவிட்டபுரம்)

பிரபல இசைமேதை கே. பி. சுந்தராம்பாளின் மறைவுக்கு மாவை முருகன் திருப்பணிச்சபை அனுதாபம் தெரிவித்துள்ளது.

மேற்படி சபையின் கூட்டம் ஆலய மண்டபத்தில் மகாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள் தலைமையில் நடைபெற்றபோது அன்னாரது மறைவுக்கு மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டு அனுதாபமும் தெரிவிக்கப்பட்டது.

தமது இறுதிக்காலத்தில் இலங்கைக்கும் விஜயம்செய்து மாவிட்டபுரத்தில் இசைக்கச்சேரி செய்ததன்மூலம் இறுதிக் காலத்திலும் ஈழத்து ரசிகர்களது மனம் கவர்ந்த கே. பி. சுந்தராம்பாளது மறைவு ஈழத்து ரசிகர்களுக்கு பேரிழப்பாகும் என மேற்படி சபை தனது அனுதாபத்தில் தெரிவித்துள்ளது.

இலங்கை இசைவேளாளர் சங்கம் விடுத்துள்ள இரங்கல் செய்தியொன்றில் 'இசையுலகில் தனக்கென ஓர் தனியிடத்தை வகித்து இசையுள்ளங்களைக் கவர்ந்த சுந்தராம்பாளின் மறைவையிட்டு மிகுந்த கவலையடைவதுடன் அவரது இடத்தை இனி யார் நிரப்புவார்கள் என்பது சந்தேகமே என்பதையும் கூறிவைக்கவிரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாந்திவு தொழுநோயாளர் வைத்தியசாலையில் இடப்பெறும் குறைபாடுகளை நேரில் ஆராயும் பொருட்டு பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை நேரில் விஜயம் செய்து குறைபாடுகளை கண்டறிவார்.

## பொன் விழாக் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ். மாவட்ட பிரிவு நிறுவப்பட்டு 50 ஆண்கள் நிறைவு பெறுவதை முன்னிட்டு நடைபெறும் பொன்விழா நிகழ்ச்சிகளின் இறுதி நிகழ்ச்சியான பொதுக் கூட்டம் இன்று முற்பகல் யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைத் தலைவர் திரு. மலோரி விஜயசேகரா உட்படப் பலர் உரையாற்றுவார்கள். (ச)

## கொழும்புமாநகர்மத்தியில் —
# கான்ஸ்டபிளின் தீரத்தினல் கொள்ளை முறியடிப்பு!
## ஒருவர் பலி மூவரும் கைது!!

(கொழும்பு)

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் துணிகரச்செயல் காரணமாக பெரும் கொள்ளை ஒன்று தக்கசமயத்தில் முறியடிக்கப்பட்டது.

நேற்று கொழும்புத் துறைமுக அதிகாரசபை காசாளர் 45 ஆயிரம் ரூபாவை வங்கியிலிருந்து எடுத்துக்கொண்டு வந்தபோது ஆயுதம் தாங்கிய நால்வர் அப்பணப்பையைக் கொள்ளையடித்துக்கொண்டோடிய சமயம் துறைமுகப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள்குணபால கொள்ளையர்களில் ஒருவரைத் துரத்திச்சென்று பிடித்தார். அப்போது ஏற்பட்ட மோதலில் கொள்ளையர்வசமிருந்த கைக்குண்டு வெடித்து இருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த கொள்ளையன் ஆஸ்பத்திரியில் மரணமானன். கான்ஸ்டபிள் சிகிச்சைபெற்று வருகிறார்.

பொலிசாரின் தீவிரமுயற்சியினல் ஏனைய 3 கொள்ளையரும் சிறிதுநேரத்தில் கைது செய்யப்பட்டனராம். பணமும் மீட்கப்பட்டது. (இ)

## மகாசமாதி

(வல்வெட்டித்துறை)

செல்வச்சந்நிதி ஸ்ரீ முருகுப் பிள்ளை மௌனகுரு கடவுள் ... தமது 75 வது வயதில் மகா சமாதியடைந்துள்ளார்கள்.

சுவாமிகளின் காயபூர்த்தி கர்மங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

# செய்திச் சுருக்கம்

### மீன்பிடித் துறைமுகம்

(பலாலி)

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினல் நிர்மாணிக்கப்பட்டுவரும் மயிலிட்டி மீன்பிடித் துறைமுக வேலைகள் பூர்த்தியடைந்ததுடன், மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனம் அதனைப் பொறுப்பேற்றுக்கொண்டது.

### மாட்டுவண்டிப் போட்டி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு விவசாயிகள் கழகம் நடாத்தும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி பிளுக்கை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

### பிரதமர் விஜயம்

(மன்னர்)

பெரிய குஞ்சுக்குளத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மாதிரிக்கிராமத்தை திறந்து வைக்கவும், மன்னர் மாவட்டத்திற்கு லக்சபான மின்சாரம் வழங்குவதற்கான வேலைகளை ஆரம்பித்து வைக்கவும் பிரதமர் திரு. ஆர். பிரேமதாச அடுத்தமாதம் 25-ம் திகதி மன்னருக்கு விஜயம் செய்வார்.

### திருமுறை விழா

(மன்னர்)

இம்மாதம் 29-ம் திகதி மன்னர் பட்டினசபை சிறுவர் விளையாட்டரங்கில் திருமுறை விழா நடைபெறும். திரு. செ. இராசதுரை, மூதூர் எம். பி. ஜனுப் எம். ஈ. எச். மஹ்றூப், மன்னர் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்ணண்டோ ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

### வாழ்வளிக்க ஏற்பாடு

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் இப்பகுதியில் வாழும் அங்கவீனர்களுச்கு வாழ்வளிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. அங்கவீனர்களைப் பற்றிய விபரங்களை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி உயர்வகுப்பு மாணவர்கள் மூலமாகத் திரட்டி வைத்திய சிகிச்சைகளையும் மற்றும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதென மேற்படி கழகம் முடிவு செய்துள்ளது.

### ஐ. தே. க. கிளை

(நெல்லியடி)

கரவெட்டி மேற்கு, கரவெட்டி மத்தி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சிக் கிளையை மகாவலி மகாவலி அபிவிருத்தித்துறைக்கு பொறுப்பான அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

### போக்குவரத்து பாதிப்பு

(மண்டைதீவு)

யாழ்ப்பாணம் பண்ணைச்சந்தியிலிருந்து மண்டைதீவு நோக்கிச் செல்லும் பிரதான வீதி, ஊர்காவற்துறை பெரும் தெருக்கள் திணைக்களத்தினல் பூரணமாக திருத்தியமைக்கப்படாததால் மேற்படிவீதியால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

### ஆச்சிரம நிர்வாகக் குழு

(மண்டைதீவு)

வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் மேற்படி ஆச்சிரம மண்டபத்தில் சுவாமி பரமானந்தா தலைமையில் நடைபெற்றபோது, ஆச்சிரமத்தின் நிர்வாகக்குழுத் தலைவராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### நோயாளர் அவதி

(மண்டைதீவு)

மண்டைதீவு அரசினர் ஆஸ்பத்திரியில் குடிநீர் இல்லாததால் நோயாளர் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இதன்காரணமாக ஆஸ்பத்திரி வார்ட்டில் தங்கியிருக்கும் நோயாளர்கள் வேறு இடங்களிலிருந்து நீர் பெற்று வருகின்றனர்கள்.

### சிரமதானம்

(மண்டைதீவு)

மண்டைதீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானம், வித்தியாலய அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் தலைமையில் சிரமதானம் மூலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது, சிரமதானத்தில் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும், பெற்றோர்களும் பழைய மாணவர் சப்க உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் பாராட்டு

(சாவகச்சேரி)

அறவழிப் போராட்டக் குழு ஆக்கபூர்வமான, சமூக, சமயப் பணிகளில் ஈடுபட்டு வருவதனை அறிந்து பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை பாராட்டிக் கடிதம் எழுதியுள்ளார். பிரதேச அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகின்ற இந்து சமயத் திணைக்களம் அறவழிப் போராட்டக் குழுவினை சமய நிறுவனமாக அங்கீகரித்துப் பதிவு செய்துள்ளது.

### மின்சார விநியோகம்

(பச்சிலைப்பள்ளி)

இலங்கை மின்சார சபையினல் கொடிகாமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்திற்கு 3 லட்சம் ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுசெய்திருந்தார்.

### புதியகட்டிடம்

(பச்சிலைப்பள்ளி)

வெற்றிலைக் கேணி பர்மேஸ்வரா சனிஷ்ட மகா வித்தியாலயத்தில் 18ஆயிரம் ரூபா செலவில் ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தினைப் போதிப்பதற்காகக் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தினை பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம்அடுத்த மாதம் 6ம் திகதி திறந்து வைப்பார்.

### பெற்றூர் தினவிழா

(பண்டத்தரிப்பு)

சித்தங்கேணி கணேச வித்தியாசாலை வருடாந்த பரிசளிப்பு விழாவும், பெற்றூர் தின விழாவும் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது, வித்தியாலய அதிபர் திரு. வே. தம்பையா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கலந்து கொள்வார்.

## நெல்லொரு பகுதி பிள்ளையார் மண்டலாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தாவடி தெற்கு, ஸ்ரீ நெல்லொரு பகுதிப் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகவிழாவைத் தொடர்ந்து இடம் பெற்றுவரும் மண்டலாபிஷேக விழாவில் கடந்த வெள்ளிக்கிழமை கொக்குவில் இந்து கனிட்ட வித்தியாசாலை மாணவி செல்வி நகுலினி (மீரா) நடராஜனின் பக்திப் பாடல் இன்னிசை இடம் பெற்றது.

இதில் வேணுகானமணிதிரு. சு. அரியநாயகம், செல்வன் செ. தயாபரன் ஆகியோர் புல்லாங்குழலும், செல்வன் பா. கண்ணன் வயலினும், செல்வன் வசந்தன் தபேலாவும் பக்கவாத்தியம் வாசித்துச் சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மாணவி கமலம் கொலை வழக்கு:

# "2-ம் எதிரிக்கு மாருக வேறுஆட்கள் சாட்சியமளித்தது தெரியும்"

### குறுக்கு விசாரணையில் ஏ. எஸ். பி.

(நமது புலோலி நிருபர்)

"கமலம் கொலைச் சம்பவத்தில் 1-ம் எதிரியின் வாக்குமூலத்தையும் அடிப்படையாகக் கொண்டே 2ம் எதிரியின் மீது கொலை, கொள்ளைக் குற்றங்கள் சாட்டி வழக்குத் தொடர்ந்தோம். நாங்கள் துரட்சி அணைத்த பின்னரும் இந்த மன்றில் 2-ம் எதிரிக்கு எதிராக வேறு ஆட்கள் சாட்சியமளித்தது எனக்குத் தெரியும்.

இவ்வாறு பொலிகண்டி ரியூட்டறி மாணவிகமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த யாழ். குற்றவியல் பகுதி உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜனுப் எம். எஸ். எம். நிசாம் 2ம் எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவினுல் குறுக்குவிசாரணை செய்யப்படும்போது தெரிவித்தார்.

கடந்த 1980 பெப்ரவரி 21ம் திகதிக்கும் 22-ம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்குதியில் பொலிகண்டியைச் சேர்ந்த ரியூட்டறி மாணவி கமலத்தை வராத்துப்பளை ஆனைவிழுந்தான் மயானத்திற்கு அண்மையில் கொலை செய்தார்கள் எனவும், கொலை செய்யப்பட்ட கமலம் அணிந்திருந்த 3600 ரூபா பெறுமதியான தங்கநகைகளை அபகரித்தார்களெனவும் கந்தசாமி ராஜ் குமார் (ராஜன்) அல்லது வீரப்பன் அவரது நண்பரான பொன்சியஸ் பெர்ணண்டோ (ஜெமி) அல்லது ஜெமின்சன் ஆகியோர் மீது குற்றம்சாட்டி பருத்தித்துறை பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினமும், 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவும் ஆஜராகி இருந்தனர்.

நீதிமன்றத்திற்கு உதவியாகச் சட்டத்தரணி எம். சோமசுந்தரமும், பொலிசார் சார்பில் சப்இன்ஸ்பெக்டர் ஜனுப் பீ.எம்.டூலும், பொலிசாருக்கு உதவியாக சட்டத்தரணிகளான எஸ். சண்முகசுந்தரம், எஸ். சிவஅருள்சுந்தம் (காண்டீபன்), செல்விகளான சந்திரா சச்சிதானந்தம், எல். பி. பிலிப், உமா துரைசிங்கம் ஆகியோரும் ஆஜராகி இருந்தனர்.

உதவிப்பொலீஸ் அத்தியட்சகர் ஜனுப் நிசாம் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

சட்: நீர் செய்த பணிப்பின் பேரில் சப் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதி 1-ம் எதிரியை வெளியே எடுத்துச்செல்வதற்கு 7-4-80-ல் ஒரு விண்ணப்பம் செய்யப்பட்து?

ஆம்.

சட்: 7-4-80-ல் 2-ம் விண்ணப்பம் நீதிமன்றத்தில் செய்யப்பட்டபோது உமக்கோ, சப்இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதிக்கோ போதிய அவகாசம் இருந்தது. நீதிமன்றத்திற்கு அறிவிப்பதற்கு 3-4-80ல் 1-ம் எதிரி உமக்கு அளித்த வாக்கு மூலத்தைப்பற்றி அறிவிப்பதற்கு அல்லவா?

7-4-80-ல் சப்இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதி மன்றுக்கு கொடுத்த விளக்கத்தில் 3-4-80 அன்று யாழ். சிறைச்சாலையில் இச்சந்தேக நபர்களின் வாக்கு மூலங்கள் பதியப்பட்டதனல் மேலும் விசாரணைக்காக சில இடங்களைக் காட்டுவதற்காக சந்தேக நபரான 1-ம் சந்தேக நபரைப் பருத்தித்துறைக்குக் கொண்டுவர ஏற்பட்டது.

சட்:- நீர் வந்து 3-4-80ல் இரு எதிரிகளின் வாக்குமூலங்களையும் எடுத்துள்ளீர் 7-4-80ல் நீர்செய்த விண்ணப்பம் 1ம் எதிரி மட்டும் சம்பந்தப்பட்ட விண்ணப்பமாகும்? - ஆம்.

நீத:- 3-4-80ல் நீங்கள் 1ம் எதிரியிடமிருந்து எடுத்த வாக்குமூலம் குற்றத்தை ஒப்புக் கொள்கின்ற வாக்குமூலமென்றும் 2ம் எதிரியிடமிருந்து எடுத்த வாக்குமூலம் குற்றத்தை மறுக்கும் வாக்கு மூலமென்றும் வித்தியாசப்படுத்திக் காட்டக் கூடிய வகையிலே 7-4-80லே மன்றுக்கு செய்த விண்ணப்பத்திலே ஏன் குறிப்பிடவில்லை? - நீதிமன்றத்தினுடைய மனதிலே 1ம் எதிரியைப் பற்றிய தப்பு எண்ணம் ஏற்படக் கூடாது என்பதற்காகவே நாங்கள் எடுத்த வாக்கு மூலத்தின் தன்மையைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

சட்:- 1-4-80லும் சப் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதி மன்றுக்குச் செய்த விண்ணப்பங்கள் பருத்தித்துறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியினுல் செய்யப்பட வேண்டியன?- ஆம். அவ்விண்ணப்பங்கள் சட்டப்படி பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினுல் செய்யப்பட வேண்டியவை. 1ம் எதிரி 3-4-80ல் எமக்கு அளித்த வாக்குமூலத்தையோ அல்லது அதற்கு முதல் அவர் எமக்கு அளித்த வாக்குமூலத்தையோ நம்பவில்லை.

சட்:- 9-5-80ல் நீங்கள் துரட்சி அணைத்தபோது இந்த வழக்கின் போதிய விசாரணைகள் முடிந்து விட்டனவா?- எங்களுக்குத் துரட்சி அணைப்பதற்குப் போதிய ஆதாரம் இருந்தது. துரட்சியை அணைத்த பொழுது மேலும் விசாரணைகள் செய்து சாட்சிகளுடைய சாட்சிப்பட்டியலை அணைப்பது வழக்கம்.

சட்: இந்த வழக்கிலே நீங்கள் சாட்சிப்பட்டியலை அணைக்கவில்லை. மேற் கொண்டு மேலதிகமாகச் சாட்சிகளை அழைக்கவுமில்லை துரட்சி அணைத்தபின்?- அதை இவ்வழக்கில் துரட்சியை அணைத்த பிறகு பொலிசார் மேற்கொண்டு விசாரணை நடத்தியதாக அறியவில்லை.

சட்: துரட்சியை 9-5-80ல் அணைக்கும்படி பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குப் பணிப்பு வழங்கியது நீர்தான்?- ஆம்.

சட்: இரண்டு எதிரிகளுக்கும் எதிராகத் துரட்சி அணைக்கும்படி பணித்தீர்?- ஆம்.

சட்: இந்த வழக்கில் சிரேஷ்ட அதிகாரியாகப் பணிபுரிந்த நீர் இவ்வழக்குக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தபோது அதைநீங்கள் பார்வையிட்டீர்களா? அல்லது அங்கீகரித்தீர்களா?- நான் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு இரு எதிரிகளுக்கும் எதிராக கொலைக் குற்றச்சாட்டிற்கும் கொள்ளைக் குற்றச் சாட்டிற்குமாக துரட்சி அணைக்கும்படி பணித்தேன். ஆனல் அதை நான்பார்க்கவும் இல்லை; அங்கீகரிக்கவுமில்லை.

நீதவான்:- 9-5-80 ல் தாக்கல் செய்யப்பட்ட துரட்சியிலே இடம்பெறும் கொள்ளைக் குற்றச் சாட்டிலே இவ்வழக்கில் இடம் பெறும் ஒரு சோடிகாப்பு இடம் பெறவில்லை என்பது தெரியுமா?- எனக்குத் தெரியாது.

சட்: உமக்கு பருத்தித்துறைப் பொலிஸ் இதுவரை அது பற்றி அறிவிக்கவில்லை, அதாவது கொள்ளைக் குற்றச் சாட்டிலே 1 சோடி காப்பு சான்றுப் பொருளாக இடம் பெறவில்லை என்று?- இப்போதான் முதன்முறையாகக் கேள்விப்படுகிறேன்.

சட்:- 9-5-80 ல் பொலிசார் துரட்சி அணைப்பதற்கு 2 ம் எதிரி கொலை செய்ததற்கோ அல்லது கொள்ளையடித்ததற்கோ என்ன ஆதாரம் இருந்தது?- மனேகரனின் வாக்குமூலத்தையும் 1 ம் எதிரியின் வாக்குமூலத்தையும் அடிப்படையாகக் கொண்டுதான் 2 ம் எதிரியைக் குற்றம் சாட்டினேம்.

சட்:- மனேகரனின் வாக்குமூலம் 1 ம் எதிரி கொடுத்த வாக்குமூலத்தின் சாராம்சம்? —மனேகரனின் சாட்சியம் 1 ம் எதிரி அவருக்குக் கூறிய சாட்சியத்தின் சாராம்சம் அல்ல. இந்த வழக்கில் பொலிசாரால் செய்யப்பட்ட விசாரணையின்மூலம் கிடைத்த சாட்சியத்தின் அடிப்படையில் துரட்சியை மன்றில் சமர்ப்பித்து மிகுதி விசாரணையை மன்றில் ஒப்படைத்தோம்.

சட்:- 9-05-80 துரட்சியை அணைத்தபின் நீங்கள் உங்களுடைய விசாரணையாக இந்த வழக்கில் யாதொரு விசாரணையையும் நடத்தவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறீர்கள்? - ஆம்.

சட்:- உங்களைப் பொறுத்த வரையிலே 9-5-80ல் துரட்சி அணைத்தபொழுது 2ம் எதிரிக்கு எதிராகக் கிடைத்த அதே ஆதாரம் தான் இன்றுவரை இருக்கிறது அல்லவா? - அப்படி நான் சொல்லவில்லை. அதற்குப்பின் இந்த மன்றில் வேறு ஆட்கள் 2ம் எதிரிக்கு எதிராகச் சாட்சியமளித்திருப்பது எனக்குத் தெரியும்.

சட்:- 9-5-80ல் நீர் இந்த வழக்கு விசாரணைக்குப் பொறுப்பதிகாரியாக இருந்தீர்கள் உங்களுக்கு 2ம் எதிரிமேல் நீதிமன்றத்தில் பிணை விண்ணப்பம் செய்திருக்கிருர் என்பது தெரியும்? - ஆம்.

சட்:- 2ம் எதிரி யாழ் மேல் நீதிமன்றத்திற்கு விண்ணபப்ம் செய்தபொழுது பருத்தித்துறைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு என்ன தெரிவித்திருந்தீர்? - இந்த விடயத்தில் அரசசட்டத்தரணி சொல்வது போல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சொல்லியிருந்தேன்.

சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் உதவி பொலிஸ் அதிபர் ஜனுப். நிசாமை குறுக்கு விசாரணை செய்தார்.

சட்:- ஏன் நீதிமன்றத்திற்கு ஒப்புதல் வாக்குமூலம் எடுத்து 2 மாதங்களாகியும் அறிவிக்கத்தவறினீர்கள்? - 1ம் எதிரி கொடுத்த இருவாக்கு மூலங்களில் எது உண்மை எதுபொய் என்று தீர்மானிப்பது முடியாமல் இருந்தபடியாலும் விசாரணையின்போது மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கையும் முறையில்லாதபடியால் நாங்கள் நீதிமன்றத்திற்கு 1ம் எதிரி 3-4-80ல் கொடுத்த வாக்கு மூலம் பற்றி அறிவிக்கவில்லை.

நீத: அதாவது 1-ம் எதிரி 4-3-80ல் கொடுத்த வாக்கு மூலம் உண்மையானதா அல்லது 3-4-80ல் சிறைச்சாலையில் கொடுத்த வாக்குமூலம் உண்மையானதா என்பதைத் தெரிந்து கொள்ளாமல் 9-5-80ல் இவ்வழக்கை தாக்கல் செய்யப் பணித்தது எதற்காக?-அதுவரையிலும் நாங்கள் பதிந்த சாட்சியங்களின் படியும், மேலும் சாட்சிகள் இந்த வழக்கிலே எங்களுடைய விசாரணைக்குச் சாட்சியமளிக்க வராதபடியாலும் நாங்கள் 2-ம் எதிரிகள் மீதும் சந்தேகித்து வழக்கை 9-5-80ல் தாக்கல் செய்தோம்.

எனக்குப் பொலிஸ் சேவையில் 22 வருட அனுபவங்கள உண்டு. நான் 3-4-80ல் 1-ம் எதிரியின் வாக்குமூலம் பதிந்தபோது எனக்குத் தெரியும், அந்த வாக்குமூலம் அவர் ஏற்கனவே கொடுத்த வாக்குமூலத்திலிருந்து வேறுபட்டதென்று சந்தேக நபர் ஒருவர் வாக்குமூலம் அளிக்க விரும்பினுல் அவ்வாக்குமூலத்தைப் பதிவதென்று சட்டத்தில் உள்ளது.

சட்: நான் சொல்கிறேன். நீரும் இரத்தினசபாபதியும் யாழ். சிறைச்சாலைக்குச் சென்று 1-ம் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலத்தை வலிந்து பெற்றிருக்கிறீர்கள் என்று?- அதை நான் மறுக்கிறேன்.

சட்: 10-4-80ல் நீர் பொலிஸ் விசாரணை மேற்பார்வை நடத்திக்கொண்டிருந்தீர்?-ஆம்.

14-4-80 உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதியும் இன்னும்இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் சிறைச்சாலையிலிருந்து 1-ம் எதிரியை வெளியே கூட்டி வந்தது எனக்குத் தெரியும். என்னுடைய பணிப்பின் பேரில் தான் 1-ம் எதிரியை இரத்தினசபாபதி எடுத்துச் சென்ருர். 1-4-80ல் நான் கொடுத்த பணிப்பின் பேரில்தான் அவர் அப்படிச் செய்தார்.

சட்: 10-4-80ல் 1-ம் எதிரியை வெளியே சிறைச்சாலையிலிருந்து எடுத்துச் செல்வதற்கு சப் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதிக்கு றைபிளும் 10 தோட்டாக்களும் எடுத்துச்செல்ல அனுமதி கொடுத்திரா?-இல்லை. 1-ம் எதிரியைத் தக்க பாதுகாப்பாக கூட்டி வருமாறு பணித்திருந்தார். (க)

# காணுமற்போன சைக்கிள்கள் கண்டுபிடிக்க உதவுங்கள்

யாழ். மாவட்டத்தில் தினமும் சைக்கிள்கள் திருட்டுப்போகின்றன. ஒரே தினத்தில் சில சமயம் ஐந்து அல்லது ஆறு சைக்கிள்களும் திருட்டுப் போகின்றன. திருட்டும்போன சைக்க்ள்களைக் கண்டு பிடிப்பதற்கு பொலிசார், பொதுமக்களின் ஒத்துழைப்பை நாடியுள்ளனர்.

''ஈழநாடு'' இதழில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், சனிக்கிழமையும், திருட்டுப்போன சைக்கிள்கள் பற்றிய விபரம் தொடர்ந்து வெளிவரவிருக்கிறது. இந்தப் பட்டியலில் வெளிவரும், இலக்கங்களைக் கொண்ட சைக்கிள்களைக்கண்டால், உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு பொலிசார் பொது மக்களைக் கோரியுள்ளனர். இதனுடன் பழைய சைக்கிள்களை வாங்குபவர்கள் அதனை வாங்குமுன், அச்சைக்கிள் இலக்கத்தை 'ஈழநாடு' இதழில் வரும் இப்பட்டியலுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்படியும் அல்லது பொலிஸ் நிலையத்திற்கு சென்று அந்த இலக்கத்தைக் காட்டி, அது திருட்டு சைக்கிள் இல்லையென்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே வாங்கும்படியும் யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு உதவிப் பொலிஸ் அதிபர் ஜனுப் எம். எஸ். எம். நிசாம் ஆலோசனை கூறுகின்ருர்.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் இதுவரை 150க்கு மேற்பட்ட சைக்கிள்கள் திருட்டுப் போயிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். திருட்டு எப்பொழுது எங்கு நடைபெற்றது என்பதும், குறிப்பிட்ட சைக்கிள் இலக்கமும் வருமாறு:

| சைக்கிள் இல: | திருட்டுபோனஇடம்: | திகதி: |
|---|---|---|
| 77 D 146 (றலி) | கொடிகாமம் | 4-1-80 |
| BV 84179 (ஹம்பர்) | யாழ்ப்பாணம் | 6-1-80 |
| CE 217 (றட்ஜ்) | யாழ்ப்பாணம் | 9-1-80 |
| BJ 41902 (றலி) | யாழ்ப்பாணம் | 11-1-80 |
| D 475 (கசல்) | யாழ்ப்பாணம் | 13-1-80 |
| CU 388 (றலி) | மானிப்பாய் | 13-1.80 |
| DK 89778 (றலி) | மானிப்பாய் | 14-1-80 |
| C 1304 (றலி) | யாழ்ப்பாணம் | 16-1-80 |
| EE 3209 (ஈஸ்ரேன்) | யாழ்ப்பாணம் | 17-1-80 |
| RS 9627 (ஞேட் மாஸ்டர்) | யாழ்ப்பாணம் | 17-1-80 |
| DL 53980 (றலி) | யாழ்ப்பாணம் | 17-1-80 |
| DE 1548 (றலி) | எழுதுமட்டுவாள் | 18-1-80 |
| CE 1652 (றலி) | மூளாய் | 18-1-80 |
| DK 2852 (றலி) | யாழ்ப்பாணம் | 18-1-80 |
| DL 78435 (றலி) | தெல்லிப்பளை | 25-1-80 |
| HD 114098 | யாழ்ப்பாணம் | 25-1-80 |
| B 8445 (றலி) | பருத்தித்துறை | 26-1-80 |
| 1929 (றலி) | பலாலி | 1-2-80 |
| RT 6312 (ஞேட் மாஸ்டர்) | கள்ளியங்காடு | 1-2-80 |
| 74 L 552 (ட்ரும்) | யாழ்ப்பாணம் | 2-2-80 |
| EA 3753 (ஈஸ்ரன்) | யாழ்ப்பாண்ம் | 2-2-80 |
| EF 1148 (றலி) | பருத்தித்துறை | 8-2-80 |
| B 36205 (றலி) | யாழ்ப்பாணம் | 8-2-80 |
| 76 A 2 (ட்ரும்) | யாழ்ப்பாணம் | 8-2-80 |
| DL 80246 (றலி) | சித்தங்கேணி | 8-2-80 |

(செவ்வாய்க்கிழமை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கிலிருந்து வெளிநாட்டவர் தாயகம் திரும்புகின்றனர்!

## 800 இந்தியர் விசேட விமானத்தில் திரும்பினர்!

லண்டன், செப். 26

**ஈராக்கின் தெற்குப் பிரதேசத்தில் தொழில் புரிந்து வந்த சுமார் 5,000 வெளிநாட்டவர்கள் அங்கு ஏற்பட்டுள்ள யுத்தத்தின் காரணமாக அங்கிருந்து வெளியேறி தமது நாடுகளுக்கு திரும்புகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஈராக்—குவைத் நாட்டின் எல்லையில் பல வெளிநாட்டவர்கள் குவைத்திற்குள் பிரவேசிப்பதற்காக அந்நாட்டு அரசாங்கத்திடம் அனுமதி கோரி நின்று கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

### தாயகம் திரும்புகின்றனர்

ஈராக்கில் வேலைசெய்துவந்த சுமார் 500 போலந்துப்பிரஜைகள் தஞ்சம் புகுந்திருந்த குவைத்திலிருந்து நேற்று விமானமூலம் தாயகம் திரும்பினர்களென தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கிலிருந்து குவைத்திற்குத் தப்பியோடிய சுமார் 300 பிரிட்டிஷ் பிரஜைகள் அங்கிருந்து பிரிட்டனுக்கு அல்லது வேறொரு அயல்நாட்டிற்குச் சென்றிருப்பதாக பிரிட்டிஷ் தூதரக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

குவைத்திலிருந்து சுமார் 150 அமெரிக்கர்களும் தாயகம் திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியர் திரும்புகின்றனர்

ஈராக்கில் தொழில் புரிந்த சுமார் 800 இந்தியர்களும் விசேட விமானங்களில் நேற்று தாயகம் திரும்பியதாகக்கூறப்படுகிறது.

ஈராக்கிலிருந்துவெளியேறிய வெளிநாட்டவர்களில் இத்தாலியர், ஜப்பானியர், கனேடியர், ரஷ்யர், ஜேர்மானியர், ஒல்லாந்தர், இந்தியர் ஆகியோரடங்குயிருப்பதாகக்கூறப்படுகிறது.

### ஜப்பான், பிரான்ஸ் கோரிக்கை

தொடர்ந்து நடந்துவரும் ஈரான்—ஈராக் யுத்தத்தை நிறுத்த உதவிபுரியுமாறு இஸ்லாமிய நாடுகளை ஜப்பானும், பிரான்சும் கேட்டுள்ளன.

யுத்தத்தை நிறுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் ஐக்கியநாடுகள் சபையுடன் சேர்ந்து மேற்கத்தைய நாடுகளும் ஈடுபட்டு வருகின்றன.

ஈரான்—ஈராக் யுத்தம் பாரசீக வளைகுடாப் பிரதேசத்திற்குள் வெளிநாட்டுக் கப்பல்கள் பிரவேசிப்பதற்கு ஆபத்தை உண்டு பண்ணும் பட்சத்தில் அங்கு சர்வதேச கடற்படை ஒன்றை நிரந்தரமாக நிறுத்தி வைப்பது அவசியமென்றுமேற்கத்தைய நாடுகள் கருதுவதாக நியூயோர்க்கிலிருந்து வெளிவரும் ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன.

### சர்வதேச கடற்படை

இச்சர்வதேச கடற்படையில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கடற்படைகள் இடம்பெறலாமென்று கூறப்படுகிறது.

இம்மூன்று நாடுகளும் மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் தங்கள் கடற்படைகளைநிறுத்தி வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (வெ)

## சிரியாவில் சோவியத்படை?

டமாஸ்கஸ், செப். 26

ஈரான்-ஈராக் யுத்தத்தைத் தொடர்ந்து சிரியா சோவியத் யூனியனுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதில் அக்கறை காட்டிவருவதாகக் கூறப்படுகிறது.

இதன் மூலம் சிரியாவின் பிராந்தியத்தில் சோவியத் படைகளை தயார் நிலையில் வைத்திருப்பதற்கும், தனக்கு அவசியமானபோது இப்படைகளின் உதவியைப்பெறமுடியுமெனவும் சிரியா கருதுவதாக தெரிவிக்கப்படுகிறது. (வெ)

## ஈரான்-ஈராக் யுத்தம்: பிரி. பிரதமர் யோசனை

பெல்கிரேட், செப். 26

ஈரான் ஈராக் யுத்தம் குறித்து பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்கிரேட் தட்சர் பெல்கிரேட்டில் நிருபர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், ''ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஈரான்—ஈராக் யுத்தநிறுத்தக் கோரிக்கையை விடுத்து, பேச்சுவார்த்தைகள் மூலம் இவ்விரு நாடுகளின் பிரச்னையையும் தீர்த்துவைக்க வேண்டும்'' ''அணிசேரா நாடுகளும் இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்தவேண்டும்'' என்றூர்.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்கிரட் தட்சர் மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு யூகோஸ்லாவியா வந்திருக்கின்றூர். (வெ)

## இணைப்புக்கு வரவேற்பு

திரிபோலி, செப். 26

சிரியாவும் லிபியாவும் இணைவதை அனைத்து அரபு மக்கள் காங்கிரஸின் நிரந்தரச் செயலவை வரவேற்றுள்ளது. இந்த இணைவு இவ்விரு நாடுகளின் மக்களது நலன்களுக்கு மட்டுமல்ல அரபு உலகம் முழுவதினதும் நலன்களுக்கு உகந்தது என்று செயலவையின் அறிக்கை கூறுகிறது.

## இஸ்லாமிய புனிதஸ்தலம் புனரமைப்பு

ப்ரன்ஸே, செப். 26

மத்திய ஆசியாவில் உள்ள கிர்சியக் குடியரசின் தென் பகுதி நகரான ஒஷாவில் அமைந்திருக்கும் இஸ்லாமிய புனிதஸ்தலத்தை பாதுகாக்க குடியரசின் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பத்தாம் பதினோராம் நூற்றுண்டுகளைச் சேர்ந்த கட்டடங்களைப் புனரமைக்கும் வேலை ஆரம்பமாகிவிட்டது.

## சுந்தராம்பாளுக்கு அனுதாபம்

புதுடில்லி, செப். 26

பிரபல இசைக்கலைஞரும், நடிகையுமான திருமதி கே.பி. சுந்தராம்பாளின் மறைவு குறித்து மத்திய விவசாய ஸ்டேட் அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் ஆழ்ந்த அனுதாபம்தெரிவித்துள்ளார்.

அவர் தமது அனுதாபச் செய்தியில், திருமதி கே. பி. சுந்தராம்பாள் ஒருமாபெரும் தேசபக்தராவார் என்று கூறியுள்ளார். (வெ)

## ராமச்சந்திரன் இந்.காங்கிரஸில் சேருவார்

புதுடில்லி, செப். 26

முன்னாள் மத்திய மந்திரி திரு. எஸ். ராமச்சந்திரன் தானும், தன்னுடைய ஆதரவாளர்கள் பலரும் இந்திரா காங்கிரசில் சேரப்போவதாக அறிவித்துள்ளார்.

இம்மாதம் 30ம் திகதி பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்யும் பொழுது, அவரின் முன்னிலையில் இந்திரா காங்கிரசில் திரு. ராமச்சந்திரனும் அவரின் ஆதரவாளர்களும் சேர்ந்து கொள்வார்கள் எனக் கூறப்படுகிறது. (வெ)

## அமெரிக்க டாலர் வீழ்ச்சி

டோக்கியோ, செப். 26.

டோக்கியோ நாணய சந்தையில் அமெரிக்க டாலரின் மதிப்பு தொடர்ந்து வீழ்ந்து கொண்டிருக்கிறது. நேற்றுக் காலை ஒரு அமெரிக்க டாலருக்கு 212. 1 ஜப்பானிய யென் கொடுக்கப்பட்டது. கடந்த 15 ஆண்டுகள் நாணயப் பரிவர்த்தனை வீதத்தில் இதுவே மிகவும் குறைவானதென்று கூறப்படுகிறது.

## அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கொள்கை எதியோப்பியா கண்டனம்

நியூயோர்க்.செப்—26

''அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக் கொள்கையும் இந்து சமுத்திரத்திலும் பரசீகக் குடாவிலும் அதிகரித்துள்ள அதன் ராணுவ நடவடிக்கைகளும் அதன் நவகாலனியாதிக்க மேலாதிக்கத்தை ஆபிரிக்கா முழுவதிலும்மத்திய கிழக்கு நாடுகளிலும் ஸ்தாபிப்பதைநோக்கமாகக் கொண்டவை.''

இவ்வாறு கூறும் எதியோப்பிய வெளிநாட்டமைச்சரது கடிதம் ஒன்றுஐ.நா. தலைமைக் காரியாலயத்தில் விநியோகிக்கப்பட்டது. பொதுச்சபையின் உத்தியோக பூர்வ தஸ்தாவேஜுவாக உள்ள இக் கடிதம்; 'அமெரிக்கா இப் பிராந்தியம் சம்பந்தப்பட்ட தனது கொள்கையை மாற்றியமைக்க ஐ. நா.நிர்ப்பந்தம் கொண்டுவர வேண்டும்'என்று கூறுகிறத.

## வீடுகள் புனரமைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புத் தொகுதியிலுள்ள 324 குடியேற்றத்திட்ட வீடுகள் வெளிநாட்டு உதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இருபத்தைந்து வருட காலத்திற்கு மேலாகப் பழமை வாய்ந்த இவ்வீடுகள் யாவும்கடந்த புயலினால் முற்றாகச் சேதமடைந்தன. இதனை இப்பகுதி மக்கள் பிராந்திய அபிவிருத்தி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்ததையடுத்து அமைச்சர் இத்தகவலை தெரிவித்தார்.

## காபூலில் சிலமணிநேரம்...

காபூல் செப். 26.

ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் படைகள் காபூல் சர்வதேச விமான நிலையத்தை முற்றுக்கையிட்டு சில மணித்தியாலங்களுக்கு அங்கிருந்து விமானங்கள் புறப்படுவதைத் தடைசெய்தன என அறிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனிலிருந்து ஆப்கானிஸ்தானிற்கு வரும் முக்கியஸ்தரொருவருக்கு பாதுகாப்பளிப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மேற்கத்தைய ராஜதந்திரிகள்தெரிவித்தனர். (வெ)

## சீனவில் குடும்பக் கட்டுப்பாடு

பீக்கிங், செப். 26

சீனவில் இந்த நூற்றுண்டின் இறுதியில் சனத்தொகை சுமார் 120 கோடியாக இருக்கும் என்று சீன அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனல் சீனவில் குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்துவது அவசியமென்று சீனப் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

## சிறிமா குடியியல் உரிமைநீக்கம்: இந்திரா காங்கிரஸ் கண்டனம்!

புதுடில்லி, செப். 26

இலங்கையின் முன்னாள் பிரதமமந்திரி திருமதி சிறிமா வோ பண்டாரநாயக்காவினதும் அவரது அமைச்சரவையில் இடம்பெற்ற முன்னாள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ்பண்டாரநாயக்காவினதும் குடியுரிமைகளை ரத்துச்செய்வதென [illegible] இலங்கையின் விசேட ஜனதிபதி ஆணைக்குழுவின் முடிவை அகில இந்திய இந்திராகாங்கிரஸ் கமிட்டிவன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்திரா காங்கிரசின் பொதுச்செயலாளர் திரு. எஸ். முகாபாத்ரா புதுடில்லியில் நிருபர்களிடம் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், [illegible] பண்டாரநாயக்கா என்ற பிரபல தலைவரின் மீதுகளங்கம் கற்பிப்பதற்காக இலங்கையின் ஆளும்கட்சி மேற்கொண்டுள்ள ஒரு தீய நோக்கமே இதுவாகும்'' என்றூர்.

''திருமதி பண்டாரநாயக்கா அணிசேரா நாடுகளின் இயக்கத்திற்கு ஆற்றியுள்ள பணிகளைகுறைத்து மதிப்பிடமுடியாது'' என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளையில் இலங்கை அரசின் இம்முடிவைக்கண்டனம் செய்து இந்திரா காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். (வெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த
**ராமன்தேடியசீதை**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
**கைகொடுத்த தெய்வம்**

**ஸ்ரீதர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, மாலினி பொன்சேகா, ஸ்ரீதேவி, ஜெய்சித்ரா
**பைலட் பிரேம்நாத்**
விரைவில்
எம். ஜி. ஆர். - லதா நடித்த
**மீனவ நண்பன்**

**வெலிங்டன்**
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
**THE DEEP**

**லிடோ**
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45
7-15, 9-45
**Foul Play**

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
10-30, 2-30, 6-30, 9-45
75—வது வெற்றித் திருநாளை நோக்கி ..
**நீயா?**
கமல், லதா, ஸ்ரீபிரியா,
மஞ்சுளா, விஜயகுமார்,
நம்பியார், சுருளி
இசை: சங்கர் — கணேஷ்
எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
**சட்டம் என் கையில்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 4-45, 7-00, & 9-45
SEAN CONNERY, RICHARD BURTON in
**SHALAKO**
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

**WINDSOR** (JAFFNA)
IT'S EVIL ... IT'S HORRIFIC
IT'S CONCEIVED BY THE DEVIL
Daily 4 Shows
Daily at 10-30 a m, 2-00, 4-30, & 7-00 p m only
JOAN COLLINS — EILEEN ATKINS
RALPH BATES — DONALD PLESANCE
in
**"I DON'T WANT TO BE BORN"**
Color Adults only

## சாட்டி...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யாகவும் பிரயாணிகளுக்கு துணை செய்யும் சிந்தாத்திரை மாதாவாகவும் இடைவிடா அருள் செய்யும் சதா சகாயத் தாயாகவும் எண்ணற்ற கோலங்களில் எத்தனையோ கோடி அற்புதங்களை அனுதினமும் நடாத்திக்கொண்டிருக்கிறார்கள். இதனால் நன்றி மறவா நல் ஆன்மாக்கள் தம் அன்புக் காணிக்கையாக அன்னைக்கு ஆலயம் எடுத்து சிறப்பித்தனர்... சிறப்பிக்கின்றனர். இவ்வகையில் கடல் கொஞ்சு சாட்டி மண்ணில் அன்னையின் புகழ் பாடவென அமைக்கப்பட்டதுதான் இச் சிந்தாத்திரை மாதாவின் திருக்கோவில். நம் தமிழ் மூதாதையரின் இப்பணியை உவப்புடன் அன்னை ஏற்றுக் கொண்டதற்கு எடுத்துக்காட்டாக இங்கு அருள் மழை பொழிந்து அன்னை இப் பகுதியை அற்புத பகுதியாக மாற்றி நிற்கிறார்.

இத்திருப்பதியின் மகோற்சவம்வழமைபோல் புரட்டாதி 19 கொடியுடன் ஆரம்பமாகி 28 ஞாயிறு காலை திருப்பலி பூசையுடனும் செபமாலை முழங்க அலை முழங்கும் கரையில் அன்னை அருட்கோலம் காட்டி அன்புப் பவனி வந்து அருள்பொழியும் திருப்பவனியுடனும் இனிது நிறைவேற இருக்கிறது. இப்பதி நோக்கி படை எடுக்கும் பக்தகோடிகளின் வசதி கருதி இ. போ. ச. சேவைகளும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சிந்தாத்திரை அன்னை அருள் பெற்று அனைவரும் சிந்தை மகிழ்வார்களாக!

## வட்டுக்கோட்டை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முறை நாட்களில் காலை நேரத்தில் நூல் நிலையத்தை மூடி வைப்பது பெருந்தொகையான வாசகர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது. மாலையிலும், இரவு நேரங்களிலும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் படிக்க வசதியில்லாதவர்களுக்கு காலையில் நூல் நிலையத்தைத் திறந்துவைப்பதன் மூலம் வசதி செய்து கொடுக்கலாம்.

ஏனெனில் விடுமுறை நாட்களில்தான் பொதுமக்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் படிப்பதற்கு பெருமளவு வசதியாக இருக்கும். ஏனைய நாட்களில் அவர்கள் பாடசாலைகளுக்கும், உத்தியோகங்களுக்கும் சென்றுவிடுவார்கள். ஆகவே பொது விடுமுறை நாட்களிலும், சனி, ஞாயிறு தினங்களிலும் காலையில் வட்டுக்கோட்டை பொது நூல் நிலையத்தைத் திறந்து வைப்பதற்கு இது குறித்து கிராமசபையின் விசேட ஆணையாளர் கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நி. வெற்றிவேலுப்பிள்ளை
வட்டுக்கோட்டை.

**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினசரி 6-30, 930
சனி, ஞாயிறு 2-15
எம் ஜி ஆர் - சரோஜாதேவி
**பணக்காரக் குடும்பம்**
(புதிய பிரதி)

**ராஜா** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் மு. கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
மக்கள் கலைஞர் ஜெய்சங்கரின் அருமையான சண்டைக் காட்சி.
அருமையான பாடல்களுடன் குமுகுமு கலரில் உருவான ஒப்பற்ற திரைக் காவியம்.
ஜெய்சங்கர், ஜெயசித்திரா, அசோகன், எம். ஆர். ராதா,
எஸ். வி. சுப்பையா நடிக்கும்
**வண்டிக்காரன் மகன்**
(ஈஸ்மன் கலர்)

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 11-ம் திகதி
(சனிக்கிழமை)
(27 - 9 - 1980)

மேடம்: ஆசைவார்த்தைகளின் மூலம் உங்களிடமிருந்து அகப்பட்டதைச் சுருட்டுவதற்கு சிலர் முனைவார்கள், இனந்தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள், நிதானம் விரும்பத்தக்கது.

இடபம்: பெரிய இடத்துச் சிநேகிதம் இன்று ஏற்படலாம், சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும், புது வழிகளின் மூலம் பணம் கிடைக்கும், குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

மிதுனம்: பேராசையின்மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள், இதனால் விபரீதங்கள் தோன்றக்கூடும், மறைமுக எதிர்ப்புக்களை சமாளிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம், முன் எச்சரிச்கை நன்று.

கடகம்: பொறியியலாளர்களுக்கு பொன்னான தினம், புகழும் பொருளும் குவிவதற்கான சந்தர்ப்பம் உண்டு, பொதுவாகத் தொழிலில் வெற்றியுண்டு.

சிங்கம்: ஒளிமயமான எதிர்காலத்துக்கு இன்று வித்திடப்படும், சிலர் வாழ்க்கையில் திருமணப் பேச்சும் இடம் பெறும், தங்கையின் முன்னேற்றம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

கன்னி: கருடப் பார்வை உங்களை வட்டமிடும், முன்னேற்றத்தை தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள், சிலருக்கு அன்னியவாசமும் அகால போசனமும் உண்டு.

துலாம்: இனிமையின் அழைப்பு உங்களுக்குக் கிடைக்கும், இல்லம் பல்கலைக் கழகமாக மாறும், அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப் படுத்தும், களஸ்திர வழியாலும் கண்ணியம் சேரும்.

விருச்சிகம்: கழுகுப் பார்வை வட்டமிடும், கடமையில் தடைகள் ஏற்படும், நண்பர் ஒருவருடன் பகைத்துக் கொள்ள நேரிடலாம், முடிந்தவரையில் வழக்கு விவகாரங்களை இன்று தவிர்த்துக் கொள்ளவும்.

தனுசு: தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு, காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும், பெற்றோர்களாயின் ஆதரவு கிடைக்கும், தொழில்துறையிலும் வெற்றியுண்டு.

மகரம்: தொழில் புரியும் இடத்தில் செல்வாக்குப் பெருகும், மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், உல்லாசப் பயணமொன்றுக்கும் திட்டமிடப்படலாம், பொருள்வரவும் உண்டு.

கும்பம்: பணவிவகாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது, புத்திரர்களாலும் புகழுக்கு இடமுண்டு, வீட்டில் சுபகாரியமொன்று இடம்பெறலாம்.

மீனம்: துன்பத்தின் ரேகைகள் நிழலாட்டம் போடும், துணைவரின்உடல்நலம் கெடும், பணமும் பெருமளவில் செலவாகும்.

சோதிடக்கலாநிதி
**க. வேலுப்பிள்ளை**

## நாடும் நடப்பும்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

தினைத் தொட்டிருக்கும் என நம்புகிறோம். கடந்த காலங்களில் எம்மத்தியிலே பல சமுதாயச் சிந்தனையாளர்கள் தோன்றியதன் காரணமாகத்தான் கடந்தகாலங்களில்சுடர் விட்டு ஒளிவீசிய பல தாக்கமுள்ள சமூகப்பிரச்னைகள் தீர்க்கப்பட்டன. இவ்வரிசையில் தங்களின் சீரிய சிந்தனை இக்கால மக்களுக்கு நல்ல முறையில் பயன்படட்டுமே.

பாரம்பரிய செயல்பாட்டு வழிமுறைகளில் இருந்து தங்களை விடுவித்துக் கொண்டு புதிய எண்ணங்களை உருவாக்கி தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்கால சுபிட்சத்திற்கு உழைக்க வாரீர் எனக் கேட்டு, சமூக அடிமை விலங்கில் இருந்து மக்களைக் காப்பது எமது இன்றைய கடமையாகும் எனத் தெரிவித்து விடைபெறுகின்றோம்''.

சனசமூக நிலையங்கள்,கிராம அபிவிருத்திச் சங்கங்கள், இந்து இளைஞர் பேரவை, விளையாட்டுக் கழகங்கள் மாதர் முன்னேற்றச் சங்கங்கள் ஆகியவற்றுக்கு மேற்கண்ட கடிதத்தை அறவழிப் போராட்டக் குழுவின் செயலாளர் அனுப்பி வைத்திருக்கிறார்.

நல்ல முயற்சி வாழ்த்துவோம்.

— ஊர்சுற்றி

# இளங்கலைஞர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திரா பரிசில்களை வழங்குவார். நாளை நடைபெறும் விழா மலரினை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வெளியிட்டு வைப்பார். இதனையொட்டி இக் கட்டுரை வெளிவருகிறது.)

முத்தமிழின் நடுநாயகமாக விளங்கும் இசை, தமிழ் மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்த ஒன்றாகும். வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் இசை தொடர்பு கொண்டுள்ளது. ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் இறைவனே இசையினால்மனம் நெகிழ்ந்து இராவணேஸ்வரனுக்கு அருள்பாலித்தார். அத்தகைய இசையை வளர்ப்பதில் குறிப்பாக இளங்கலைஞர்களை ஊக்குவிப்பதில் அக்கறை கொண்ட கலைஞர்களும் இரசிகர்களும் சேர்ந்து இற்றைக்கு ஒன்பது ஆண்டுகளுக்கு முன் தோற்றுவித்ததே இன்று பலரும் பாராட்டும் வகையில் பணிபுரிந்துவரும் இலங்கை இளங்கலைஞர் மன்றம்,

வருடந்தோறும் இசைப் போட்டிகள் நடாத்தி தங்கப் பதக்கங்கள், கேடயங்கள், கிண்ணங்கள் பரிசில்களாக அளித்து வருவதுடன் பத்து நாள் இசைவிழாவிலும் மூன்று நாள் தியாகராஜசுவாமிகள் உற்சவத்திலும் வருடாந்தம் ஐநூறுக்கு மேற்பட்ட இசைக் கலைஞர்களுக்கு மேடை அமைத்துக்கொடுத்து கலைத்தொண்டாற்றுகிறது இம்மன்றம். 'மியூசிக் அக்கடமி' என்ற பெயருடன் இசைநிறுவனம் ஒன்றும் நிறுவி இசை வகுப்புக்கள் நடாத்திவருகின்றது.

தகுதிவாய்ந்த உள்நாட்டு வெளிநாட்டுக் கலைஞர்கள் தரமான நிகழ்ச்சி அளிப்பதற்கு குறைபாடற்ற நவீன வசதிகள் கொண்ட கலாமண்டபம் இல்லாமை நம்நாட்டில் நிலவும் நீண்டநாள் குறைபாடாகும். இக்குறையை நீக்குவான்வேண்டி இம்மன்றம் மூன்றரைக்கோடி ரூபா செலவில் ஒரு கலாமண்டபம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதற்கான காணி பதினைந்துபரப்பு கொன்றையடி வயிரவர் ஆலய தர்மகர்த்தாவினரிடம் குத்தகைக்கு பெறப்பட்டுள்ளது. கட்டிட நிதி தொடர்பாக இவ்வாண்டு தைமாதம் பிரபல பாடகர் டாக்டர் எம். பாலமுரளி கிருஷ்ண குழுவினரின் இசைக் கச்சேரி நடாத்தப்பட்டு நிதி வசூலிக்கப்பட்டு வங்கியில் விடப்பட்டுள்ளது. சுமார் ஆயிரத்தைந்நூறு ஆசனங்களைக் கொண்டுள்ள மண்டபத்தைக் கீழேயும், இருநூறைம்பது பேர் கலந்துகொள்ளக்கூடியமாநாட்டுமண்டபம், பத்து விடுதிஅறைகள், நூலகம். ஆய்வகம், ஒலிப்பதிவகம் முதலியவற்றைக் கொண்ட மாடி மேலேயும் அமைந்த ஒரு பூரணமான கலாமண்டபம் இரண்டுவருடகாலத்திற்குள் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது நிறைவேறும் பட்சத்தில் கலைஞர்களதும் இரசிகர்களதும் நீண்டநாள் ஆசை பூர்த்தியாவதுடன் கலைத்துறைக்குள் ஒரு பூரணத்துவத்தை அளிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றிக்கோவுக்டி வேறு கிளைகள் இல்லை

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

## அரபாத் ஈரான் விஜயம்

தெஹ்ரான், செட். 26

ஈராக் — ஈரான் யுத்தத்திற்கு சமரச முடிவு காணும் பொருட்டு பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனுப் யாஸிர் அரபாத் ஈராக் அதிபர் சதாம் ஹுசெய்னுடன் பேச்சுநடத்திவிட்டு இன்று ஈரான் சென்றுள்ளார்.

## தமிழிலும் வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

பல வருடங்களாக ஆங்கிலத்தில் வெளியாகி வந்த 'கர்மாந்த' சஞ்சிகை இம்மாதம் முதல் தமிழிலும் வெளிவருகின்றது.

தமிழ் கைத்தொழிலாளர்கள் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு தமிழில் 'கர்மாந்த' சஞ்சிகையை வெளியிடவேண்டுமென்ற கோரிக்கையைவிடுத்ததன் பேரில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். தொழில் அதிபர்களுக்கு

# திணைக்களங்களின் ஆலோசனை கிடைப்பதில்லை

## பிரதித் தொழில் ஆணையாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

''யாழ் மாவட்டத்தில் புதிதாக தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் பல தொழிலதிபர்களுக்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் ஆலோசனைகள் கிடைப்பதில்லை. இதனால் அவர்கள், தம்மிஷ்டப்படி தொழிற்சாலைகளை அமைத்துவிட்டு உயர் அதிகாரிகளால் ஏற்படும் சிரமங்களால் விசனமடைகின்றார்கள். இந்நிலை மாறுவதற்கு இன்றைய கைத்தொழில் கருத்தரங்கு நல்ல பலனைக் கொடுக்கும்.''

இவ்வாறு நேற்றுக்காலை யாழ்ப்பாண செயலக ஆலோசனை மண்டபத்தில் நடைபெற்ற கைத்தொழில் கருத்தரங்கில் தொழில் திணைக்கள பிரதி ஆணையாளரும், பிரதம தொழிற்சாலைப் பகுதி கண்காணிப்பு பொறியியலாளருமான திரு, எஸ். சிவபாஸ்கரன் தெரிவித்தார்.

கருத்தரங்கை யாழ்ப்பாண லயன்ஸ் கழகம், தொழில் திணைக்கள தொழிற்சாலைப் பகுதி, இலங்கைத் தொழில் அபிவிருத்திச் சபை ஆகியவற்றுடன் இணைந்து நடாத்துகின்றது: கருத்தரங்கை முன்னைநாள் லயன்ஸ்கழக உதவி மாவட்ட கவர்னர் டாக்டர் யோகு பசுபதி, மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

கருத்தரங்கிற்கு யாழ்ப்பாண லயன்ஸ்கழக தலைவர் லயன்ஸ் எல். ஆர். முத்தையா தலைமை வகித்தார்.

திரு. சிவபாஸ்கரன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

யாழ் மாவட்டத்தில் கடந்த மூன்றுண்டுகளுக்கு முன்னர் எண்ணூற்றி ஐம்பது தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. தற்போது இத்தொகை ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்துபவர்கள் ஒவ்வொரு பகுதியிலும் பூரணபயிற்சியுடையவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல் விபத்துக்கள் அதிகரித்து பலர் உயிரிழக்கும் அபாயமும் ஏற்படலாம். இந்நிலையை தவிர்ப்பதற்கு ஊழியர்களுக்கு போதியபயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

பொதுவாக, இலங்கையின் பல பாகங்களிலும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்ட இடங்களில் கழிவுப் பொருட்களை அகற்றுவதில் பல சிரமங்களை தொழிலதிபர்கள் எதிர்நோக்குகின்றனர். இதனால் பொதுமக்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் ஏற்படும் சிரமங்களை நீக்குவதற்குத் தொழிற்திணைக்களத் தொழிற்சாலைப் பிரிவுப் பொறியியலாளர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

### கைத்தொழில் அபிவிருத்தி அத்யட்சகர்

கைத்தொழில் அபிவிருத்திக்கான அத்தியட்சகர் திரு. டபிள்யு. ஈ. பொட்றியூ தமது உரையில், கூறியதாவது:

அரசாங்கம் பெருந்தொகையான பணத்தை, அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு செலவிட்டுள்ளது. தற்போது இங்கு 36 கைத்தொழிலாளர்கள், பல கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர். இன்னும் நாற்பது துண்டுக் காணிகள் புதிய கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன. இங்கு மக்களது சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் நெல் குத்தும் ஆலை; மரம்அரியும்ஆலை போன்றவற்றை நிறுவதற்கு நாம் அனுமதி வழங்க மாட்டோம். ஒருவருக்கு அரை ஏக்கருக்கும் ஒரு ஏக்கருக்கும் குறையாத காணி வழங்கப்படும்.

திரு. எஸ். செபஸ்தியாம் பிள்ளை, வருமான வரித்திணைக்கள பிரதி ஆணையாளர் திரு. எஸ். சுப்பிரமணியம், யாழ். மக்கள் வங்கி உதவி பிராந்திய முகாமையாளர் திரு. வி. இராஜேந்திரா, டாக்டர் எஸ். ராஜேந்திரா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்

கருத்தரங்கில் கலந்துரையாடலும் இடம் பெற்றது.

இன்று கருத்தரங்கு இரண்டாவது நாளாக நடைபெறும்.

# இன்று நடைபெறும் இலக்கியப் பெருவிழா

## இளஞ்செழியன் கலந்துகொள்கிறார்

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் முழங்கும் இலக்கியப் பெருவிழா இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் திராவிட முன்னேற்றக்கழக முன்னணிப் பேச்சாளர் தமிழேறு ஏ.இளஞ்செழியன் சிறப்புரையாற்றுவார்.

திரு. அ. பொ. செல்லையா தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ். நகர மேயர் திரு. இராஜா விஸ்வநாதன் பண்டிதர் கா. பொ. இரத்தினம் வாழ்த்துரை வழங்குவர். விழாவில் பட்டிமன்றம் ''இன முழக்கம்'' மலர் வெளியீடு கவியரங்கம் ஆகியனவற்றுடன் வண்ணை கலைவாணர் நாடகமன்றத்தினரின் நகைச்சுவை விருந்தும் காரை அன்பரசியின் தமிழிசைப் பாடல்களும் இடம் பெறும்.

# லட்சம் ரூபாவுக்கு மேல் இருவீடுகளில் கொள்ளை!

## குடத்தனையில் சம்பவம்

(புலோலி)

நள்ளிரவில் வீட்டிற்குள் துப்பாக்கிகளுடன் நுழைந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று நித்திரையிலிருந்த கணவனையும் மனைவியையும் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி தங்க நகைகள், பணம் உட்பட 58,600 ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த குடத்தனை என்னும் கிராமத்திலே இத்துணிகரக் கொள்ளை நடைபெற்றுள்ளது.

வல்லி கதிரன் என்பவருடைய வீட்டில் நடைபெற்ற இக்கொள்ளை சம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இப்புகாரையடுத்து சார்ஜண்ட் எஸ். வடிவேலு, கான்ஸ்டபிள் எம். ரீ. எம். உவைஸ் ஆகியோரடங்கிய பொலிஸ் கோஷ்டி புலன் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றது.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. டி. பி. எல். விஜயக்கோன் கொள்ளை நடைபெற்ற இடத்திற்குச் சென்று பார்வையிட்டு விசாரணை செய்தார்.

பிடித்தொழிலுக்காக்காகக் கடலுக்குச் சென்றமையால் அவரது மனைவி பொன்மலர் இரவு வீட்டைப் பூட்டிவிட்டு நித்திரைக்குச் சென்றிருந்தனராம். இரவு 2 மணிபளவில் வீட்டின் கூரையைப் பிரித்துக் கொண்டு உள்ளே இறங்கிய இருஇளைஞர்கள்பொன்மலருக்கு கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி பெட்டிக்குள்ளிருந்த 53,000 ரூபா பெறுமதியான தங்க நகைளையும், 6,000 ரூபா பணத்தையும் கொள்ளையடித்துக் கொண்டுமறைந்துள்ளனராம்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சந்திரா குண ரத்தின, கான்ஸ்டபிள் ஜனுப் எம். ரீ. எம். உவைஸ் தலைமையிலான பொலிஸ் கோட்டி இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாகத் துரித புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றது.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு- டி. பி. எல், விஜயக்கோன் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டு விசாசாரணை செய்தார். (க)

### மற்றொரு கொள்ளை

குடத்தனையில் மற்றொரு துணிகர திருட்டு நடைபெற்றுள்ளது.

வீட்டின் கூரையைப் பிரித்துக்கொண்டு நள்ளிரவில் வீட்டிற்குள் இறங்கிய இரு இளைஞர்கள் நித்திரையில் இருந்த பெண்ணை எழுப்பி கத்திமுனையில் பணம், நகைகள் உட்பட 59,000 ரூபாவைக் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

கடற்றொழிளாளரான தங்கராசா சம்பவதினமிரவு மீன்

## இசை விழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஒன்பதாவது ஆண்டு இசைவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை யாழ்.திவ்விய ஜீவன மண்டபத்தில் நடைபெறுகின்றன.

மாலை 4- 00 மணிக்கு மங்கள இசை நாச்சிமார்கோவிலடி மு. சிவதாஸன் குழுவினர் 5-00 மணிக்கு அகடமி மாணவர்கள் பாட்டு 5-20 மணிக்கு செல்வி சுந்தராம்பிகை கணபதிப்பிள்ளை வீனை, செல்வி ஜெயமணி தேவி ஐயாத்துரை மிருதங்கம். 5-40 மணிக்கு அகடமி மாணவர்கள் தாளவாத்தியம் 5-50 மணிக்கு அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற மற்றணவிகள் பாட்டு 7-10 தலைமையுரை யாழ். திவ்யஜீவன சங்கத் தலைவர் சட்டத்தரணி திரு. எஸ். கனகரட்ணம் 9-30 பரதநாட்டியம் ''சதங்கை நர்த்தனலய'' அதிபர் திருமதி லீலா ஆறுமுகையா அவர்களின் மாணவிகள். (கு)

## சுவீப்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| 07 D 0407 | 01 E 0425 |
| 03 E 0873 | 04 E 0859 |
| 06 E 0886 | 22 E 0927 |
| 24 E 0178 | 17 F 0869 |
| 31 F 0587 | 36 F 0959 |
| 28 G 0259 | 05 H 0262 |
| 06 H 0436 | 13 H 0175 |
| 14 H 0891 | 17 H 0773 |
| 03 J 0608 | 04 J 0095 |
| 07 J 0600 | 13 J 0862 |
| 28 J 0331 | 29 J 0221 |
| 08 K 0139 | 27 K 0062 |
| 27 K 0402 | 32 K 0863 |
| 32 K 0882 | 35 K 0946 |
| 33 L 0088 | 33 L 0876 |
| 17 M 0993 | 23 M 05'6 |
| 06 N 0763 | 19 N 0456 |
| 23 N 0536 | 06 O 0574 |
| 27 O 0723 | 34 O 0464 |
| 36 O 0444 | 01 P 0299 |
| 23 P 0846 | 28 P 0563 |
| 03 Q 0382 | 09 Q 0264 |
| 27 Q 0959 | 02 R 0079 |
| 05 R 0335 | 14 R 0:09 |
| 27 R 0986 | 36 R 0400 |
| 03 S 0177 | 10 S 0810 |
| 07 T 0916 | 17 T 0518 |
| 20 T 0422 | 25 T 0871 |

| | |
|---|---|
| 24 U 0689 | 11 U 0970 |
| 15 U 0426 | 26 U 0829 |
| 17 V 0151 | 26 V 0628 |
| 28 V 0728 | 33 V 0'48 |
| 08 W 0437 | 11 W 0851 |
| 17 W 0258 | 20 W 0383 |
| 20 W 0733 | 34 W 0334 |
| 01 X 0512 | 07 X 0698 |
| 22 X 0929 | 29 X 0912 |
| 30 X 0087 | 36 X 0127 |

19 Y 0902

| | |
|---|---|
| 20 Y 0556 | 24 Y 0738 |
| 25 Y 0799 | 02 Z 0365 |
| 12 Z 0296 | 13 Z 0621 |
| 23 Z 0119 | 23 Z 0445 |
| 23 Z 0836 | 25 Z 0465 |

25 Z 0533

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை)

## ஜனதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சியில் கிராமியக் கைத்தொழில் அமைச்சர்'' திரு. எஸ். தொண்டமானும் உரையாற்றுவார், (ம-இ)

## ஐ.நா. பாதுகாப்புச்சபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சியமாகக் கூடி இப்பிரச்னை குறித்து ஆராய்ந்தாக நியூயோர்க் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

## அணு ஆயுத..

1-ம் பக்கத் தொடர்ச்சி

### ரஷ்யா எச்சரிக்கை

இது இவ்வாறிருக்க ஈரான் யுத்தத்தில் ரஷ்யா மத்தியஸ்தம் வகிக்கவே விரும்புகிறது என்றும் இந்த யுத்தம் நீடித்தால் அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் இதில் தலையிட அமெரிக்கா ஆயத்தமாக இருக்கிறது என்றும் சோவியத் பத்திரிகையான 'பிராவ்டா' தெரிவித்துள்ளது.

இதேவேளையில் ஈராக்கின் ஊடுருவலைக் கண்டிக்குமாறு ஈரானிய மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி இஸ்லாமிய நாடுகளை தெஹ்ரான் வானொலிமூலம் கேட்டுள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் செப். 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. GE 8948/78 The Eelanaadu P. B. No. 49
Telegram Eelanaadu, Phone.389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org